வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 14.01.2024 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 14 பக்கங்கள் : 16






07 அரசியலாகும் மதம்? காங்கிரஸுடன் இணையும் சங்கர மடங்கள்!



08 தமிழ்ப் பொது வேட்பாளர் முன்மொழிவு! ஈடேறுமா? ஈடாடுமா?



09 கதிரைக்காக அலையும் அரசியலில் கட்சி என்னடா? கொள்கை என்னடா?



10 தமிழரசு தலைவர் தேர்தலும் தமிழர் அரசியலின் எதிர்காலப் போக்கும்

# கூட்டமைப்பையும் உள்ளடக்கி தேர்தலுக்கு பின் தேசிய அரசு!

## ஜனாதிபதி ரணில் திட்டம்



கொழும்பு,ஜனவரி14

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க கவனம் செலுத்தி வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

**இதுதொடர்பாக நேற்று சனிக்கிழமை அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பல கட்டமாக பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கான கூட்டணி எதிர்வரும் ஏப்ரலில் வெளியிடப்படும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடக்கில் தமிழ்க் கட்சிகள், மலையக அரசியல் கட்சிகள், பொதுஜன

15

## ஜனாதிபதி சுவிஸ் பயணம்!

கொழும்பு, ஜன. 14

உலக பொருளாதார மாநாட்டில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகருக்குச் சென்றுள்ளார்.

நேற்று சனிக்கிழமை அதிகாலை அங்கு செல்லும் அவர் உலக தலைவர்கள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

மேலும் கடந்த வருடம் இலங்கை எதிர்கொண்டிருந்த பொருளாதார நெருக்கடிகள்

15

## கந்தக்காடு புனர்வாழ்வு மையத்தில் தப்பிய கைதிகளில் 10 பேர் சரண்!

### மேலும் பலரை தேடி வலை வீச்சு

கொழும்பு, ஜன. 14

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பதற்றமான சூழ்நிலையினை அடுத்து தப்பியோடிய கைதிகளில் 10 பேர் நேற்று காலை புலஸ்திபுர பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையான

15

## மின்சார கட்டண திருத்த முன்மொழிவு பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவிடம்

### கட்டணம் குறையும் சாத்தியம்

கொழும்பு, ஜன. 14

மின்சார கட்டண திருத்த முன்மொழிவு தொடர்பான தரவுகள் பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அந்த தரவுகளுக்கு அமைவாக மின் கட்டண திருத்தம் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்கொள்ளவுள்ளது.

மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கான கோரிக்கை அடங்கிய பிரேரணை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் நேற்று முன் தினம் கையளிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த குறிப்பிட்டிருந்தார்.

மின்சாரக் கட்டணங்கள் மூலம் பொதுமக்களுக்கு அதிகபட்ச நிவாரணம் வழங்க நாங்கள் பணியாற்றி

15

## ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் யுக்திய நடவடிக்கை குறித்து கவலை

கொழும்பு, ஜன. 14

இலங்கை எதிர்கொள்ளும் போதைப்பொருள் பிரச்னைக்கு எதிராக அதிகாரிகள் பாதுகாப்பினை அடிப்படையாக கொண்ட நடவடிக்கை களை மேற்கொள்வது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டின் போதைப் பொருள் பிரச்னைக்கு சுகாதாரத்தை அடிப்படையாக கொண்ட நடவடிக்கைகளுக்கு பதில் கடுமையான பாதுகாப்பை அடிப்படையாக கொண்ட நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுப்பது குறித்து ஐ.நா. அலுவலகம் கவலை வெளியிட்டுள்ளது.

டிசெம்பர் 17ஆம் திகதிக்கு பின்னர் 29000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர், சிலர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர், மோசமாக நடத்தப்பட்டுள்ளனர் என குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன.

சோதனைகளை மேற்கொள்வதற்கான நீதிமன்ற அனுமதியில்லாமல் படையினர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர். போதைப்

15

## பொதுமக்களின் விருப்பங்களின் அடிப்படையிலேயே அபிவிருத்தி

### அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

மன்னார், ஜன. 14

மக்களின் விருப்பங்களின் அடிப்படையிலேயே அபிவிருத்தி திட்டங்கள் அமைய வேண்டும் என்பதே தன்னுடைய நிலைப்பாடு என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்திற்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜமொன்றினை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார். மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற திணைக்களங்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னைப் பொறுத்தவரையில் மக்களின் விருப்பங்களும் நலன்களுமே

15

## பொலிஸாருக்கு எதிராக தொடர்ந்து முறைப்பாடு

கொழும்பு, ஜன. 14

பொலிஸாருக்கு மற்றும் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளபட்டு வரும் அநீதியான நடவடிக்கை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு நாளாந்தம் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

எழுத்து வடிவில், தொலைபேசி மூலமாகவும், பெயர் குறிப்பிடாமல் முறைப்பாடுகள் கிடைத்து வருவதாகவும், ஆனால் மனித உரிமைகள் ஆணைக் குழு முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் ஒழுங்கு முறையிலேயே முறைப்பாடுகள் பெறப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக சில சோதனை நடவடிக்கைகள் மற்றும் சோதனைகளின்போது பொலிஸ் அதிகாரிகளின் குறைபாடுகள் தொடர்பாக

15

நீதிபதி விவகாரம்:

## அரசமைப்பு பேரவை மீது ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 14

அரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பரிந்துரைக்கப்பட்ட நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்னவின் நியமனம் தொடர்பில் அரசமைப்பு பேரவை முறையான தீர்மானம் எடுக்கவில்லை என குற்றம் சாட்டி ஜனாதிபதி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நீதிபதியின் பெயர் பரிந்துரைக்கப்பட்டபோது, ஜனாதிபதிக்கு பதில் அனுப்பிய அரசமைப்பு பேரவை, இது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

அரசமைப்பு பேரவையின் இந்த தீர்மானத்தினால் நீதித்துறை நடவடிக்கைகள் மற்றும் நீதி நிர்வாகத்தில் பாரிய குழப்பம் ஏற்பட்டுள்ளதாக

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

அரசியல் பற்றி எழுதி எழுதியே வெறுப்பு ஏற் பட்டுவிட்டது. எதையாவது புதிதாக எழுது வோம் என்றால் அதன் பின்னாலும் அரசியல்தான் என்பது வெறுப்பாக இருந்தாலும் சுவாரஸ்யமாக இருந்தது.

தெற்கில் இப்போது பரவலாக பேசப்படுகின்ற ஒரு விடயம் மத நம்பிக்கை காரணமாக ஒரு முழுக்குடும்பமும் அண்மையில் தற்கொலை செய்துகொண்டமைதான்.

அவ்வாறு தற்கொலை செய்துகொண்டால் மோட்ஷத்திற்கு போகலாம் என்ற நம்பிக்கையில் ஏழுபேரைக் கொண்ட குடும்பம் ஒன்று தற் கொலை செய்துகொண்டது. அவர்கள் தற் கொலை செய்துகொள்வதற்காக உபயோகித்தது கிட்டத்தட்ட சயனைட் போன்ற ஒரு திரவத்தை என்கின்றன சில செய்திகள்.

அந்த குடும்பத்தின் தற்கொலைக்கு பின்னர் பல்வேறு இடங்களிலும் ஒரேமாதிரியாக அதே மதநம்பிக்கை கொண்ட பலர் தொடர்ச்சியாக தற்கொலை செய்துகொண்டமை அதிர்ச்சியை ஏற்படுத்திய அதேவேளையில்தான், எகிப்தி லிருந்து ஒருவர் திடீரென்று இலங்கை வந்து தானே அடுத்த புத்தர் என்றும், தான் புத்தரின் அவதாரம் என்றும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார்.

அவர் எகிப்திலிருந்து வந்திருந்தாலும் அவர் ஓர் இலங்கையர். மகிந்த என்ற முதல்பெயரைக் கொண்டவரிடம் ஆசிபெறுவதற்காக தினசரி திரண்ட பல ஆயிரக்கணக்கானவர்களில் பல செல்வந்தர்கள், சமுதாயத்தில் மிக உயரத்தில் இருப்பவர்களே அதிகம் காணப்பட்டனர்.

பௌத்த சமயத்தில், மஹாயான - தேரவாதம் என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. அதில் தேரவாதமே இலங்கையில் பௌத்தர்கள் அனுஷ் டிப்பது.

ஆனால் இந்த புத்தரின் அவதாரம் என்று சொல்லிக்கொண்டு எகிப்திலிருந்து குதித்திருப்ப வரோ மஹாயான பௌத்தத்தைச் சேர்ந்தவர் என்று தன்னை அடையாளப்படுத்துகிறாராம்.

தன்னை புத்தரின் அவதாரம் என்று சொல்ப வர் ஏற்கனவே திருமணமான ஒருவர். புத்தர் திருமண வாழ்வை வெறுத்தவர். ஆனால் இந்த புத்தரின் அவதாரம் மீது பல பாலியல் புகார்கள் வேறு இருப்பதாக கூறப்படுகின்றது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து எகிப்தில் - அதாவது ஒரு முஸ்லிம் நாட்டில் வாழ்ந்துவந்த ஒருவர், தன்னை புத்தரின் அவதாரம் என்று கூறிக்கொண்டு, இலங்கை வந்து பௌத்தர்களி டையே புதிய சித்தாந்தத்தை பேசத் தொடங்கிய தும் பலரும் ஏன்? எதற்காக? என்று மண்டை யைக் குழப்பிக்கொண்டபோதுதான் பல விடயங் கள் வெள்ளிச்சத்திற்கு வந்திருக்கின்றன என்கின் றன தெற்கின் செய்திகள்.

இலங்கையில் தேரவாத பௌத்தத்தை முக்கிய மூன்று பிரிவுகள் கட்டுப்படுத்துகின்றன. அதில் முக்கியமானது சியன்நிகாய என்ற பிரிவே. அது நமது பிராமணர்கள் போன்றவர்களால் கட்டுப் படுத்தப்படுவது.

ராமான்ய என்ற பிரிவு சிறியது என்றாலும் அதுவும் உயர் வகுப்பினரின் பிரிவாகவே பார்க் கப்படுகின்றது.

அடுத்தது, அமரபுர - இது சமூகத்தில் கீழ்மட் டத்தினர் என்று புறக்கணிக்கப்படுபவர்களால் கட்டுப்படுத்தப்படுவது. பெரும்பாலும் அந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களே, பல்கலைக்கழகங்களில் மற்றும் போராட்டங்கள் போன்றவற்றில் முன்ன ணியில் காணப்படுகின்றனர். சொல்லப்போனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் ஜே.வி.பியைச் சேர்ந்தவர்கள்.

தேரவாத பௌத்தர்களிடையே எண்பது வீத மானவர்களை கட்டுப்படுத்தும் சியன்நிகாயவின் செல்வாக்கை உடைப்பதை நோக்கமாகக் கொண்டே இவர் நாட்டுக்குள் கொண்டுவரப் பட்டிருப்பதாகவும், அதன் பின்னணியில் ஒரு வேற்றுமதத்தவர் இருப்பதாகவும், அவரை அரசியல் கட்சி ஒன்றே இயக்குவதாகவும் தெற் கில் சமூகவலைத்தளங்களில் பகிரப்படும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

ஆக, இன்று புத்தரின் அவதாரம் என்று மக்கள் மத்தியில் "மதம் பரப்ப புறப்பட்டிருப்ப வர்களின் பின்னாலும் அரசியல்தான் இருக் கின்றது" என்பதுதான் அந்தச் செய்திகளின் ஹைலைட்.!

**- ஊர்க்குருவி.**

# பொங்கல் வியாபாரம் சூடு!






யாழ்ப்பாணம், ஜன. 14

நாளை திங்கட்கிழமை தைப்பொங்கல் பண்டி கையை முன்னிட்டு, யாழ்ப்பாணம் திருநெல் வேலிச் சந்தையில் வியா பாரம் சூடு பிடித்துள்ளது.

பொங்கல் பானைகள், வெடிகள், பழங்கள், கரும்புகள் உள்ளிட்ட பொருட்கள் அதிகளவில் விற்பனை செய்யப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கொழும்பு ஐந்துலாம்பு சந்திப் பகுதியிலும் பொங் கல் வியாபாரம் மும்முர மாக இடம்பெற்று வரு கின்றமை குறிப்பிடத்தக் கது. (அ)

# மாட்டு தலையுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 14

கீரிமலை பகுதியில் மாட்டின் தலையுடன் இளைஞன் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப் பட்டுள்ளார்.

கீரிமலை பகுதியில் மாடொன்றை சட்டவிரோதமான முறையில் இறைச்சியாக்குவதாக காங்கேசன்துறை பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப் பெற்றது. தகவ லின் பிரகாரம் சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்தபோது, சம்பவ இடத்தில் மாட்டின் தலையுடன் நின்ற இளைஞனை கைது செய்த னர்.

கைது செய்யப்பட்ட இளை ஞனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து, வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் மாட்டிறைச்சியுடன் தப்பி சென்ற ஏனைய நபர்களை கைது செய்வ தற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருடியவர்களுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன. 14

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இரும்பு திருட் டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான மூவரையும் விளக்கமறிய லில் வைக்குமாறு மல்லாகம் நீத வான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சிமெந்து தொழிற்சாலையில் கும் பல் ஒன்று இரும்பு திருட்டில் ஈடு படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் திருட்டில் ஈடுபட்டி ருந்த மூவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தி யதை அடுத்து மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ)

# டெங்கு தொற்றுக்கு உள்ளாகும் சிறுவர் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 14

கடந்த சில நாட்களாக காய்ச்சலு டன் வைத்தியசாலைக்கு வரும் சிறு வர்கள் டெங்கு தொற்றுக்குள்ளாகி யுள்ளதாக லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

தற்போது சிறுவர்களிடையே டெங்கு கடுமையாக பரவி வருவ தால் டெங்கு தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதி கரித்துள்ளதாகவும் வைத்தியர் தீபால் பெரேரா மேலும் தெரிவித் துள்ளார். (அ)

# வங்கியில் மோசடி செய்த நபர் கைது!

கொழும்பு, ஜன. 14

பதுளை - தியத்தலாவை பிர தேசத்தில் உள்ள அரச வங்கி ஒன் றின் ஏ.ரி.எம் இயந்திரத்திலிருந்து 2 இலட்சம் ரூபா ரூபாவை மோசடி யாப் பெற்ற நபர் தியத்தலாவை பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார். இவ்வாறு கைது செய்யப் பட்ட வர் மாதவாச்சி பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

பதுளை ஹல்துமுல்ல பிர தேசத்தை நோக்கி பயணித்த பஸ் ஒன்றிலிருந்து சந்தேக நபர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தியத்த லாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இணையவழியில் கடன் வழங்கி அச்சுறுத்தும் கும்பல்களுக்கு எதிராக நடவடிக்கை தேவை

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



கொழும்பு, ஜன. 14

**வெளிநாடுகளை சேர்ந்த மோசடியான வர்த்தகர்கள் இலங்கையில் ஒன்லைன் ஊடாக கடன் வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கின்றனர். கடனை உரிய காலத்தில் செலுத்த முடியாமல் போனால் அவர்களை அச்சுறுத்திவரும் இந்த கும்பல் தொடர்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

எமது நாடு வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில் வெளிநாடுகளை சேர்ந்த மோசடியான வர்த்தகர்கள் இலங்கையில் ஒன்லைன் ஊடான கடன் வழங்கும் திட்டங்களை முன்னெடுக்கின்றனர். அவர்களின் பணத்தை பயன்படுத்தியே இந்த கடன் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

இதனால் சட்ட ரீதியான பிரச்னைகள் உள்ளன. இவர்கள் கடனை வழங்கி பெருமளவில் வட்டியை அறவிடுகின்றனர். பிணையாளர் கையெழுத்து, சொத்து பிணை எதுவுமின்றியே அவர்கள் கடனை வழங்குகின்றனர். கடன் பெறுபவர்களின் புகைப்படங்கள், குடும்பத்தினரின் புகைப்படங்கள் ஆகியவற்றை பெற்றுக்கொள்கின்றனர்.

பின்னர் ஏதேனும் காரணத்தினால் கடனை மீளச் செலுத்தாவிட்டால் பேஸ்புக் ஊடாக கடன் பெற்றவர்களை அச்சுறுத்துவதுடன், அவர்கள் தொடர்பில் சேறுபூசும் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். அதே வேளை கடன் பெற்றவர்கள் கள்ளத் தொடர்புகளை வைத்திருப்பதாக கூறி குடும்பத்தினரை பிரிக்கவும் நடவடிக்கை எடுகின்றனர்.

வங்குரோத்தடைந்த நாட்டில் மக்களிடம் பணமில்லை. அவர்களிடம் பணம் இருக்கின்றது. இதன்படி வட்டியின்றி கடன் வழங்குவதாக கூறிக்கொண்டு அதனை செய்யாது 300 வீத வட்டியை அறவிடுகின்றனர். அதனை மீளச் செலுத்த தாமதமானால் அச்சுறுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர். இவர்கள் வீசாவிலேயே வருகின்றனர். இவர்கள் வணிக வீசாவில் வந்துள்ளனரா? என்று ஆராய்ந்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

## தேசிய பொங்கல் விழா மலையகத்தில்

கொழும்பு, ஜன. 14

தேசிய பொங்கல் விழாவை இம்முறை மலையகத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில், ஹற்றன் டன்பார்க் மைதானத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி தேசிய பொங்கல் விழா மிகவும் பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோர் பிரதம அதிதிகளாக பங்கேற்கவுள்ளனர்.

கலை, கலாசார நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (அ)

# செங்கடலுக்கு கப்பலை அனுப்பும் தீர்மானம் மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் அதிருப்தி

கொழும்பு, ஜன. 14

செங்கடலிற்கு கப்பலை அனுப்பும் இலங்கையின் தீர்மானம் தொடர்பில் மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்ற பணிகளில் இலங்கையர்களை இஸ்ரேல் வேலைக்கு அமர்த்துவதற்கு அனுமதிக்கவேண்டாம் எனவும் மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சமீபத்தில் சந்தித்த வேளை மேற்காசிய நாடுகளின் தூதுவர்கள் செங்கடலிற்கு கப்பலை அனுப்பும் தீர்மானம் குறித்து வெளிப்படையாக அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேலுடனான பாதுகாப்பு உடன்படிக்கைகளின் அடிப்படையிலேயே அமெரிக்காவும் பிரிட்டனும் செங்கடலில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன ஏனைய நாடுகள் அவ்வாறு செயற்படவில்லை என மேற்காசியநாடுகளின் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)



## பம்பலப்பிட்டி பிள்ளையார் ஆலயத்தில் பிரித்தானிய இளவரசிக்கு வரவேற்பு

கொழும்பு, ஜன. 14

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய இளவரசி ஆன் உள்ளிட்ட குழுவினர் கொழும்பு - பம்பலப்பிட்டி பிள்ளையார் ஆலயத்தில் நேற்று முன்தினம் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இதன்போது இளவரசி உள்ளிட்ட குழுவினர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது.

மூன்று நாள் விஜயமாக இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசி, யாழ்ப்பாணம் உட்பட நாட்டில் பல இடங்களுக்குச் சென்றிருந்தார்.

இதன்போது உள்ளூர் கலாசாரத்தின் அடிப்படையில் அவருக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டிருந்தது. இதே வேளை, வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகைக்கும் அவர் விஜயம் செய்திருந்தார்.

இந்நிலையிலேயே, பம்பலப்பிட்டி பிள்ளையார் ஆலத்தில் இளவரசி ஆனி, வழிபாடுகளில் ஈடுபட்டார். (அ)

*கிழக்கில் தொடரும் சீரற்ற காலநிலை:*

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கை மேலும் ஒத்திவைப்பு

அம்பாறை, ஜன. 14

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் மேலும் நீடிக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுவதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 22 ஆம் திகதிவரையில் பல்கலைக் கழகத்தின் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

"தற்போதைய காலநிலை முன்னறிவிப்புகளால் ஏற்படக்கூடிய சாத்தியமான ஆபத்துகளை கவனமாக ஆராய்ந்து மூத்த ஆலோசனைக் குழுவின் தீர்மானத்திற்கேற்ப எதிர்வரும் ஜனவரி 16 ஆம் திகதி வரையில் கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தொடர் மழை காரணமாக பல்கலைக்கழக பகுதி வெள்ள நீரில் மூழ்கியது. இதன்காரணமாக பல்கலைக் கழகத்தின் கல்வி நடவடிக்கைகளை மேலும் ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மீண்டும் வழமைக்கு திரும்பும் சூழலில் கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்கமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது" என தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் தெரிவித்தார். (அ)

# போலி தகவல் வழங்குவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

கொழும்பு, ஜன. 14

பொதுப் பாதுகாப்பு அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட 118 என்ற பொலிஸ் துரித இலக்கத்துக்கு வழங்கப்படும் தவல்கள் விரிவு படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதன்படி, தேசிய பாதுகாப்புக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சுறுத்தல் ஏற் படுத்தக்கூடிய பயங்கரவாத மற்றும் தீவிரவாத செயற்பாடுகளையும் இந்த இலக்கத்திற்கு வழங்க முடியும்.

வழங்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை சிறப்பு குழுவின் கீழ் இடம் பெறும்.

அதேநேரம், போலியான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு எதிராக சட்டம் அமுல் படுத்தப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

## சிறுவர் தொழுநோயாளர்கள் அதிகம் பதிவு

கொழும்பு, ஜன. 14

உலகளவில் சிறுவர் தொழுநோயாளர்கள் அதிகளவில் பதிவாகும் ஐந்து நாடுகளில் ஒன்றாக இலங்கையும் உள்ளது.

நாட்டில் பதிவாகும் தொழுநோயாளர்களில் பத்து வீதமானோர் சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தொழுநோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இந்த வருடம் 105 சிறுவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களே இவ்வாறு தொழுநோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வருடாந்தம் சுமார் 2,000 தொழு நோயாளர்கள் பதிவு செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனவரி 28ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தொழுநோய் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு தொழுநோயை கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட தெளிவுபடுத்தல் நடவடிக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொழுநோய் ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர மேலும் கூறினார். (அ)

## நிதி, பொருளாதார அமைச்சராக ஷெஹான்

கொழும்பு, ஜன. 14

நிதி, பொருளாதார அமைச்சராக, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள உலக பொருளாதார மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விஜயம் செய்துள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதி நாடு திரும்பும் வரை பதில் அமைச்சராக ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# குடிமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற லஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்வரவேண்டும்

## ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் கோரிக்கை

கொழும்பு, ஜன. 14

**ஊழலை எதிர்த்துப் போராடுவதில் குடிமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு முன்வர வேண்டும் என ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தெரிவித்துள்ளது.**

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு , இப்போது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் அதிக அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

அண்மையில் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவிற்கு நீதிபதி நீல் இத்தாவல தலைமை தாங்கியுள்ள நிலையில், முறையான ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிய மக்கள் போராட்டம் (அரகலய) ஆழமாக வேரூன்றிய ஊழலும் ஆட்சிசார் பலவீனங்களும் இலங்கையில் முடங்கச் செய்யும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன என்பதை பொதுமக்கள் உணர்ந்ததை எடுத்துக்காட்டியது.

இந்தப் பிரச்னைகளை நல்ல மனதுடன் தீர்ப்பதற்கான அரசின் விருப்பம் குறித்து பரவலான ஏமாற்றமும் விரக்தியும் நிலவுகிறது.

சிவில் சமூகம் மற்றும் சர்வதேச நன்கொடை நிறுவனங்கள், குறிப்பாக சர்வதேச நாணய நிதியம், ஊழல் எதிர்ப்பு முயற்சிகளில் உண்மையான முன்னேற்றம் நாட்டின் பொருளாதார மீட்சிக்கு முக்கியமானது என்பதை வலியுறுத்துகின்றன.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பு வரையறைகள், அதன் ஆட்சிசார் குறைநிறைகளைக் கண்டறியும் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இலங்கையின் ஊழலுக்கு எதிரான தோற்றப்பாடு பற்றிய சிவில் சமூக பகுப்பாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் என்பன இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

குறிப்பாக, பெரிய அளவிலான ஊழல் சம்பவங்களில், பொறுப்புக்கூறலை நிறுவுவது, விசாரணைக்கு வருபவர்களையும், சாட்சிகளையும் அச்சமின்றி முன்வர ஊக்குவிக்கும்.

இலங்கையில் பரவலாக காணப்படும் ஊழல் பிரச்னையின் அளவைக் கருத்தில் கொண்டு, ஊழலுக்கு எதிரான போராட்டத்திற்கு தொலைநோக்கு, அச்சமற்ற தலைமைத்துவத்தை வழங்குமாறு புதிதாக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவிடம் ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் கேட்டுள்ளது. (அ)

# ஜனநாயக விரோத சட்டங்களை அரசாங்கம் விலக்க வேண்டும்!

கொழும்பு, ஜன. 14

அரசாங்கம் ஒடுக்குமுறை ஜனநாயக விரோத சட்டமூலங்களை விலக்கிக்கொள்ளவேண்டும் என உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மக்கள் ஆணையில்லாத அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள சட்டமூலங்களின் சட்டபூர்வ தன்மை குறித்து உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் மீது நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தும் புதிய சட்டங்களை கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு சட்டபூர்வ தன்மை இல்லை என தெரிவித்துள்ள இலங்கையின் உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத் இதன் காரணமாக இரண்டு சட்டமூலங்களையும் அரசாங்கம் விலக்கிக் கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பிக்ககூடாது என வேண்டுகோள் விடுத்துள்ள உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் குறித்த விவாதத்தை அரசாங்கம் கைவிடவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் இரண்டு முக்கிய தேர்தல்கள் இடம்பெறவுள்ள நிலையில் ஒடுக்குமுறைசட்டமூலங்கள் நாட்டின் ஜனநாயகத்தின் மீதான பெரும் தாக்குதலாக அமையும் எனவும் சம்பத் தெரிவித்துள்ளார்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தின் ஊடாக பேச்சுசுதந்திரத்தை ஒடுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் ஏற்கவே கடுமையாக விமர்சித்துள்ளது இந்த சட்டமூலம் நடைமுறைக்கு வந்த பின்னர் வெளிநாட்டு ஊடகங்கள் இலங்கையிலிருந்து வெளியேற தீர்மானித்தால் இலங்கையின் பொருளாதாரத்திற்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நாடளாவிய யுக்திய சுற்றிவளைப்பு; மேலும் 897 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜன. 14

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட 'யுக்திய' சுற்றிவளைப்பில் மேலும் 897 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.30 மணி வரை மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போதே இந்த கைது இடம்பெற்றுள்ளதாக பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விசேட நடவடிக்கையில் 299 கிராம் ஹெரோயின், 172 கிராம் ஐஸ் மற்றும் 1,233 போதை மாத்திரைகள் என்பனவும் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 24 பேருக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளது. (அ)

# நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞன் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, ஜன. 14

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாசிவன்தீவு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை (12) நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞன் நேற்று சனிக்கிழமை காலை 7.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நண்பர்களுடன் நீராடச் சென்ற வாழைச்சேனை கோழிக்கடை வீதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞனே இவ்வாறு நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார்.

நேற்று முன் தினம் கல்குடா சுழியோடிகள் தேடுதல் மேற்கொண்ட போதும் இளைஞன் மீட்கப்படாத நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார் .

இவ் விடயம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு, மரண விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெண்ணின் வயிற்றிலிருந்து 13.5 லீற்றர் கொழுப்பு நீக்கம்!

கொழும்பு, ஜன. 14

சிறப்பு சத்திரசிகிச்சை நிபுணரான ஆனந்த ஜெயவர்தன, சத்திரசிகிச்சை மூலம் பெண்ணொருவரின் வயிற்றில் இருந்து 13.5 லீற்றர் கொழுப்பை வெற்றிகரமாக அகற்றியுள்ளார்.

கண்டியில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாணந்துறையைச் சேர்ந்த இந்த பெண் 61 வயதான ஓய்வுபெற்ற ஆசிரியர் எனவும் ஜயவர்தன தெரிவித்தார்.

பொதுவாக உடலில் இருந்து 4 அல்லது 5 லீற்றர் தேவையற்ற கொழுப்பு அகற்றப்பட்டாலும் 13.5 லீற்றர் கொழுப்பை அகற்றுவது மிகவும் அரிதானது எனவும் இது உலக சாதனையாக இருக்கலாம் எனவும் கேகாலை வைத்தியசாலையின் விசேட சத்திரசிகிச்சை நிபுணர் ஆனந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தப் பெண் உயர் இரத்த அழுத்தம், உடல் பருமன், முதுகு வலி, நடப்பதில் சிரமம் என பல நோய்களால் அவதிப்பட்டார். இதற்காக நீண்டகாலமாக உள்ளூர் மற்றும் மேற்கத்திய மருத்துவ முறைகளை பயன்படுத்திய போதிலும் குணப்படுத்த முடியாததால் கேகாலை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை வைத்தியர் ஆனந்த ஜயவர்தனவைச் சந்தித்துள்ளார்.

"அவர் என்னை 3 மாதங்களுக்கு முன்பு சந்தித்தார். உடல் நிறை குறியீட்டெண் (பிஎம்ஐ) 52 உடன், நோயுற்ற உடல் பருமன் என அவரது பிரச்சனையை நான் தீர்மானித்தேன். அதன்படி கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கண்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவருக்கு பேரியாட்ரிக் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இது ஆபத்தானது என்றாலும், அது வெற்றிகரமாக முடிந்தது.

அதன் பிறகு அவர் வேகமாக எடை குறைந்தார். அவரால் நடக்க முடிந்தது. ஆனால் அவரது வயிறு இன்னும் பெரிதாக இருப்பதால், நேற்று முன் தினம் கண்டியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதன் மூலம் 13.5 லீற்றர் கொழுப்பு வெற்றிகரமாக அகற்றப்பட்டது. இது மிகப் பெரிய தொகை. உலகில் சராசரியாக 4 முதல் 5 லீற்றர்கள் அகற்றப்படுகின்றன. ஆனால் இவ்வளவு பெரிய தெகை கொழும்பு அகற்றப்பட்ட உலக சதனையாக இது இருக்கலாமென நினைக்கிறேன். இது எந்த சிக்கலையும் ஏற்படுத்தவில்லை. அவர் நன்றாக இருக்கிறார் என்றும் ஏற்கனவே நிறைய நிம்மதி கிடைத்திருப்பதாகவும் என்னிடம் பகிர்ந்து கொண்டார். நேற்று முன் தினம் மருத்துவமனையில் இருந்து புறப்பட இருந்தார்" என குறிப்பிட்டார். (அ)

# செட்டியார்தெரு நகைக் கடைக்கு எடுத்துவரப்பட்ட தங்கம் கொள்ளை!

கொழும்பு, ஜன. 14

ஏறக்குறைய ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் அடங்கிய பார்சலை எடுத்துச் சென்ற நபர் ஒருவர், புறக்கோட்டை, செட்டியார் தெருவில் முச்சக்கர வண்டியில் கடத்திச் செல்லப்பட்டு, பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த பார்சலில் 432 கிராம் 21-22 கரட் தங்கம், 92 கிராம் 24 கரட் தங்கம் மற்றும் 19 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு நாணயங்கள் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

புறக்கோட்டை, செட்டியார் தெருவில் தங்க நகைக் கடை வைத்திருக்கும் வர்த்தகர் ஒருவருக்கு காத்தான்குடி மற்றும் மட்டக்களப்பில் இரண்டு தங்கநகைக் கடைகள் உள்ளன. அந்தக் கடைகளில் இருந்து உருகிய தங்க நகைகள் வாரத்தில் இரண்டு நாட்கள் கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள நகைக்கடைக்கு வருகின்றன.

புதிய நகைகளை உருவாக்குவதற்காக இவை எடுத்து வரப்படுகின்றன. தெரிந்த பஸ் சாரதிகள் மூலம் அவற்றை அனுப்புவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி அதிகாலை கொழும்பு வந்த தனியார் பஸ்ஸூக்கு தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் அடங்கிய பார்சல் வழங்கப்பட்டதாகவும், பஸ் சாரதி அதிகாலை 5.00 மணியளவில் தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு பார்சலை எடுக்க நகை கடை ஊழியர் ஒருவரை வருமாறு அறிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, ஒரு ஊழியர் மற்றொரு ஊழியரை எழுப்பி, புறக்கோட்டை கஸ்பஹ சந்திப்பிற்கு அனுப்பிவிட்டு, அவர் வரும் வரை நகைக் கடையின் முன் படிக்கட்டில் அமர்ந்தார். பேருந்தில் இருந்து பார்சலை எடுத்து வந்த ஊழியர் அதை இடுப்பில் மறைத்து நகைக் கடை அருகே வந்தபோது பின்னால் முச்சக்கரவண்டியில் இருந்து இறங்கிய நபர் ஒருவர், தம்மை சி.ஐ.டி என குறிப்பிட்டு, அவர்களின் கழுத்தை பிடித்து இழுத்து அந்த ஊழியரை வலுக்கட்டாயமாக முச்சக்கர வண்டியில் ஏற்றியுள்ளார்.

அப்போது, படிக்கட்டுக்கு அருகில் இருந்த ஊழியர் அவரைத் தடுக்க முற்பட்டபோது, கொள்ளையன் கூரிய கத்தியைக் காட்டி, ஊழியரைக் கடத்திச் சென்று, செட்டியார் வீதி வழியாக முச்சக்கரவண்டியை கொச்சிக்கடை நோக்கி மிக வேகமாக ஓட்டிச் சென்றதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

ஊழியரை கடத்திச் செல்லும் போது, இடுப்பில் மறைத்து வைத்திருந்த தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் அடங்கிய பார்சலை எடுத்த பின்னர், கடத்தப்பட்ட ஊழியரை கொச்சிக்கடை பள்ளிவாசலுக்கு அருகில் இறக்கிவிட்டு முச்சக்கர வண்டியில் தப்பிச் சென்றுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
14.01.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 29

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சம்பந்தனது தலையீட்டின் தோல்வி

இந்த மாதம் தமிழரசு கட்சிக்கான தலைவரை தெரிவு செய்யும் வாக்கெடுப்பு நடைபெறுவது உறுதியாகிவிட்டது. இது ஏற்கனவே ஓரளவு எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான் - ஆனால், சம்பந்தன் இந்த விடயத்தில் அதிருப்தியடைந்திருப்பதால் அவர் இதனை தடுக்கும் முயற்சிகளை செய்வார், ஒரு வேளை அவரது முயற்சி வெற்றிபெற்றால், போட்டியின்றி, கட்சியின் தலைமை தெரிவு செய்யப்படக் கூடுமென்னும் கணிப்பு நிலவியது - எனினும் அந்த முயற்சி தோல்வியடைந்திருக்கின்றது. சம்பந்தனது நகர்வு வெற்றியளிக்கவில்லை. சம்பந்தனது விருப்பத்தையும் மீறி புதிய தலைமைக்கான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

1949இல், இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, கட்சிக்கான தலைவர்களுக்கான போட்டி இடம்பெற்றதில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால், தமிழரசு கட்சியின் மரபு முதல் முதலாக உடைகின்றது. ஒரு வேளை, இது தமிழரசு கட்சியினது, சிதைவின் ஆரம்பமாகவும் இருக்கலாம். இதில் எவர் வெற்றிபெற்றாலும் கூட, கட்சிக்குள் இரு வேறுபட்ட அணிகள் தொழிற்படவே செய்யும்.

போட்டியில் ஈடுபடுபவர்கள் இரண்டு அரசியல் போக்குகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். ஒருவர் விடுதலைப் புலிகள் சார்பு நிலையை வெளிப்படுத்துவதன் ஊடாக, தானே தலைமைக்கு பொருத்தமானவர் என்னும் பிரசாரத்தை முன்னெடுத்துவருகின்றார். இன்னொருவர் மிதவாத நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றார். அவரால் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு நிலைப்பாட்டை எடுக்கவும் முடியாது. இந்த பின்புலத்தில் நோக்கினால், இதுவரை காலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சின்னமாக பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய கட்சிக்குள், முதல் முறையாக தமிழ் தேசியத்தை முன்னிறுத்தி ஒரு போட்டி இடம்பெறுவதான தோற்றம் தெரிகின்றது. இதில் எவர் வெற்றி பெற்றாலும் நிச்சயம் கட்சிக்குள் இரண்டு அணிகள் தொடர்ந்தும் இழுபறிப்படக் கூடிய நிலைமையே காணப்படுகின்றது.

சம்பந்தன் பதவியில் இருக்கின்ற போது, கட்சியின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்திருந்தால், இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருக்காது. இது ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்கும் பொருத்தமானது. அவர்கள் இதனை ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு சரியான தலைமை என்பது, நிலைமைகள் மோசமடையும் வரையில் காத்திருப்பதல்ல - மாறாக, தான் தீர்மானிக்கும் இடத்தில் இருக்கின்றபோதே, கட்சியின் எதிர்காலத்திற்கான சரியான அடித்தளத்தை இடுவதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டும். தனக்கு பின்னரான தலைமையை மக்களுக்கு அடையாளம் காண்பிக்கவேண்டும். சம்பந்தன் அதனை செய்யவில்லை - இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. சம்பந்தன் செல்வநாயகத்தினால் அடையாளம் காணப்பட்ட ஒரு தலைவர் அல்ல - மாறாக, யுத்தத்திற்கு பின்னரான சூழலில், வேறு எவரும் இல்லாத நிலையில் அதிர்ஷ்டவசமாக இந்த இடத்திற்கு வந்தவர். செல்வநாயகத்தின் தெரிவு அமிர்தலிங்கம்.

அமிர்தலிங்கத்தின் வெற்றிடம்தான் சம்பந்தனுக்கு வாய்ப்பை கொடுத்தது - அதேவேளை, திருகோணமலையை பொறுத்தவரையில், தங்கத்துரையின் மறைவே சம்பந்தனுக்கு வாய்ப்பை வழங்கியது. 1994ஆம் ஆண்டு தேர்தலில் சம்பந்தன் தோல்வியடைந்தார், தங்கத்துரையின் கொலையின் பின்னர்தான் அவருக்கு வாய்ப்பு கிடைத்தது. இந்த பின்புலத்தில் நோக்கினால், சம்பந்தன் தனக்கு சவாலாக யாரும் வந்துவிடக்கூடாதென்னும் அடிப்படையில்தான் செயல்பட்டார். இதன் காரணமாகவே தமிழரசு கட்சிக்குள்ளும், தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் தன்னை கேள்விக்குள்ளாக்கக் கூடிய எவரும் தலைதூக்கிவிடக் கூடாதென்பதில் எப்போதும் கவனமாக இருந்தார். இதன் காரணமாகவே தனக்குப் பின்னரான ஒருவரை இனங்காட்டுவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. சம்பந்தனது சுயநல அரசியலே, தமிழரசு கட்சியின் மரபுக்கு மாறாக போட்டியொன்று இடம்பெறுவதற்கான காரணம்.

## இராணுவ டிராக்டருடன் மோ.சைக்கிள் மோதி 2 பிள்ளைகளின் தந்தை உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கோரியடி பகுதியில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் வெற்றிலைக்கேணி முள்ளியானை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 31 வயதுடையவரே உயிரிழந்துள்ளார்.

பணி முடித்து மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும்போது மருதங்கேணி நோக்கி சென்ற இராணுவ உழவு இயந்திரத்துடன் மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## இலங்கையின் மூத்த குடிமகன் மறைவு



கொழும்பு, ஜன. 14

இலங்கையின் மூத்த நபராகக் கருதப்படும் கொட்டாச்சி நந்தியாஸ் நேற்று முன்தினம் காலமானார்.

109 வயதில் அவர் காலமானார்.

நாகொட, கப்பிட்டியா கொடையை வசிப்பிடமாகக் கொண்ட மாகல கொட்டாச்சி நந்தியாஸ் 1914 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி பிறந்தார்.

இவரை தேசிய முதியோர் செயலகம் நாட்டிலேயே மிகவும் வயதானவர் என்று அறிவித்திருந்தது.

இந்நிலையில் கொட்டாச்சி நந்தீஸ் நேற்றைய தினம் காலமானார்.

இவரது இறுதி கிரியைகள் நேற்று பத்தேகம மயானத்தில் இடம்பெற்றது.

கொட்டாச்சி நந்தியாஸின் மறைவுக்கு பல்வேறு தரப்பினரும் தமது இரங்கல்களை தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

காலி, கப்பெட்டிய கொட பிரதேசத்தில் வசித்து வந்த கொட்டாச்சி நந்தியாஸ் ஒரு விவசாயி ஆவார்.

## அகழ்வு கப்பலில் களியாட்டத்தில் ஈடுப்பட்ட மஹிந்த அணியினர்!

### ஜனாதிபதியிடம் முறையிட தீர்மானம்

கொழும்பு, ஜன. 14

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களை கப்பலில் அழைத்துச் சென்று விருந்துபசாரம் வழங்கிய சம்பவம் தொடர்பில் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக கொழும்புதுறைமுகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சரவையின் தலைவர் ஜனாதிபதி என்ற வகையில் இது தொடர்பில் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதவுள்ளோம் என அனைத்து இலங்கை பொது துறைமுக ஊழியர்கள் சங்கத்தின் தலைமை செயலாளர் நிரோசன் கொரகானகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“துறைமுக சிவில் விமான போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இந்த களியாட்ட நிகழ்வு கொழும்பு துறைமுக கப்பலில் இடம்பெற்றுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி உட்பட பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டுள்ளதை காண்பிக்கும் வீடியோக்களும் படங்களும் வெளியாகியுள்ளன.


இந்த களியாட்ட நிகழ்விற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை மில்லியன் கணக்கில் செலவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவேண்டும்.

அகழ்வு நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படும் 25 பேர் மாத்திரம் பயணிக்கக் கூடிய ஹன்சகவ என்ற கப்பலில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், துறைமுக அதிகாரசபையின் பணியாளர்கள் என 70 பேர் பயணித்துள்ளனர்” என தெரிவித்தார்.

(அ)



## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



## அயோத்தி இராமர் கோவில் குடமுழுக்கு:

# வேதங்கள் புறக்கணிக்கப்படுவதாக சங்கராச்சாரியார்கள் எதிர்ப்பு



அயோத்தியில் இராமர் கோவில் கும்பாபிஷேகம் ஜனவரி 22ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டதிலிருந்து, அந்த விழாவில் யாரெல்லாம் பங்கேற்பார்கள் என்ற விவாதம் தொடங்கியது.

இந் நிலையில், அந்நாள் நெருங்கி வருவதால் இதில் யாரெல்லாம் பங்கேற்பார்கள், பங்கேற்க மாட்டார்கள் என்ற விவாதம் தொடர்ந்து தீவிரமடைந்துள்ளது.

இந்த விழாவில் காங்கிரஸ் பங்கேற்குமா எனப் பல நாட்களாக எழுப்பப்பட்டு வந்த கேள்விக்கு அக்கட்சி புதன் கிழமை (ஜன. 10) பதிலளித்தது. இராமர் கோவிலை பாஜக அரசியலாக்குவதாக குற்றம்சாட்டி, நிகழ்ச்சியில் பங்கேற்க காங்கிரஸ் மறுத்துள்ளது.

"கோடிக்கணக்கான இந்தியர்கள் இராமரை வழிபடுகின்றனர். மதம் என்பது ஒருவருடைய தனிப்பட்ட விஷயம். ஆனால், பல ஆண்டுகளாக பாஜகவும் ஆர்எஸ்எஸ்ஸும் அயோத்தி இராமர் கோவிலை அரசியலாக்கியுள்ளன. பாதி மட்டுமே கட்டப்பட்ட கோவிலுக்கு தேர்தல் ஆதாயத்திற்காகத் தொடக்க விழா நடத்தப்படுகிறது," என்று காங்கிரஸ் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இராமர் கோவில் குடமுழுக்கு விழாவில் பாஜக மூத்த தலைவர் எல்.கே. அத்வானியும் கலந்துகொள்வார் என, விஷ்வ ஹிந்து பரிஷத் உறுதி செய்துள்ளது. முன்னதாக, இந்த விழாவில் அத்வானி கலந்துகொள்ள மாட்டார் என்று செய்திகள் வெளியாகின.

காங்கிரஸை தவிர, இரண்டு சங்கராச்சாரியார்களும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க மறுத்துவிட்டனர். ஆனால், அனைவரும் இந்த விழாவில் கலந்துகொள்ள வேண்டும் என, இரு சங்கராச்சாரியார்களும் அறிக்கை வாயிலாக அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்து மத நம்பிக்கைகளின்படி, சங் கராச்சாரியார் மிக உயர்ந்தவராகக் கருதப்படுகிறார். இந்து மதத்தில், சங்கராச்சாரியார் மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் பார்க்கப்படுகிறார். ஆதி சங்கராச் சாரியார் இந்து மதத்தின் தத்துவ விளக்கத்திற்காகவும் அறியப்பட்டவர்.

ஆதி சங்கராச்சாரியார் நான்கு மடங்களை நிறுவினார். இந்த மடங்கள் இந்து மதத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.இத்தகைய சூழ்நிலையில், இராமர் கோவில் கும்பாபிஷேக விழாவின் திகதி முடிவு செய்யப்பட்டபோது, சங்கராச்சாரியார்களின் அணுகுமுறையை அறியவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜனவரி 22ஆம் திகதி நடைபெறும் இந்த விழாவில் நாட்டின் நான்கு சங்கராச்சாரியார்களும் பங்கேற்க மாட்டார்கள் என்று ஜோதிர்மடத்தின் சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரானந்த் சரஸ்வதி தெரிவித்துள்ளார். சங்கராச்சாரியார் அவிமுக்தேஷ்வரானந்த் சரஸ்வதியின் கூற்றுப்படி, இராமர் கோவில் கும்பாபிஷேக விழா சாஸ்திரங்களின்படி ஏற்பாடு செய்யப்படவில்லை

கும்பாபிஷேக விழாவில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என, சிருங்கேரி சங்கராச்சாரியார் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆனால், சங்கராச்சாரியார் அயோத்திக்குச் சென்று அவ்விழாவில் பங்கேற்பாரா, இல்லையா என்பது குறித்து அந்த அறிக்கையில் எதுவும் தெளிவாகக் கூறப்படவில்லை.

**வேதம் புறக்கணிக்கப்படுகிறது**

"நான்கு சங்கராச்சாரியார்களுக்கும் இதில் எந்த வெறுப்போ பற்றோ இல்லை. ஆனால், வேதத்தைப் பின்பற்றி அதை மேற்கொள்வது சங்கராச்சாரியார்களின் பொறுப்பு. இப்போது அங்கு வேதம் புறக்க ணிக்கப்படுகிறது. கோவில் இன்னும் முழுமை பெறாமல் குடமுழுக்கு நடைபெறுகிறது.

"குடமுழுக்கை திடீ ரென நடத்த வேண்டும் என்ற சூழ்நிலை இல்லை. சில நேரங் களில் அங்கு இரவில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. 1992இல் கட்டடம் இடிக் கப்பட்டபோது, சில நல்ல தருணங்கள் அனுசரிக்கப்பட்டன. அப்போது எந்த சங்கராச்சாரியாரும் கேள்வி எழுப்ப வில்லை, ஏனென்றால் அன்றைய நிலை அப்படி இருந்தது," என்கிறார் சிறிராம் ஜென்மபூமி அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத்ராய்.

"இராமர் இருக்கிறார் என்று இறையியலே நமக்குச் சொல்லியிருக்கிறது. வேதத்தில் இருந்து நாம் இராமரை அறிகிறோம். அதே வேதத்தில் இருந்துதான் குடமுழுக்கு குறித்தும் அறிகிறோம். அதனால்தான் சங்கராச்சாரியார் யாரும் அங்கு செல்வதில்லை," என்று அவர் தெரிவித்துள்ளார். ●

## இந்தவார ராசிபலன் 14.01.2024 - 20.01.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மார்கழி 29
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 09.00 - 10.30 திதி : சதுர்த்தி

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

பணப் பற்றாக்குறை ஏற்படாது. எதிர்பார்த்திருந்த உதவிகள் தேடி வரும். தொழிலில் புதிய ஆர்டர்கள் குவியும். சொத்துகளில் நிலவிய பிரச்னைகள் தீரும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். விவசாயிகள் புதிய குத்தகை முயற்சியில் இறங்குவீர்கள். அரசியல்வாதிகள் மாற்றுக் கட்சியினரிடம் ஒதுங்கி இருப்பீர்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். பெண்களுக்கு குடும்பத்தினரின் மீது பாசம் அதிகரிக்கும். மாணவர்களின் கவலைகள் நீங்கும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

சுப நிகழ்ச்சிகளை நடத்துவீர்கள். தொழிலில் உயர்வைக் காண்பீர்கள். குழந்தைகள் இணக்கமாக இருப்பார்கள். அநாவசியப் பயணங்களைத் தவிர்க்கவும். உத்தியோகஸ்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். வியாபாரிகள் தனித்தன்மையை வெளிப்படுத்தி வெற்றியைக் காண்பீர்கள். அரசியல்வாதிகளின் திடீர் முயற்சிகள் சாதகமாக அமையும். கலைத் துறையினர் பாராட்டுகளைப் பெறுவீர்கள். பெண்கள் நவீன உபகரணங்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எடுத்த காரியத்தை முடிப்பீர்கள். தொழிலை நிதானமாக நடத்துவீர்கள். வருமானத்தை சிக்கனமாக செலவு செய்து சேமிக்கவும். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் வேலைகளில் பங்கு கொள்வார்கள். வியாபாரிகள் கடும் போட்டிகளைச் சமாளிப்பார்கள். விவசாயிகளுக்கு மகசூல் சீராக இருக்கும். அரசியல்வாதிகள் கட்சி மேலிடத்தின் நம்பிக்கையை பெறுவீர்கள். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவீர்கள். பெண்கள் உறவினர்களை அனுசரித்து நடப்பீர்கள். மாணவர்கள் விளையாட்டுகளில் கவனம் செலுத்துவீர்கள்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உடல் ஆரோக்கியம் சீராகத் தொடங்கும். குடும்பத்தில் வைத்தியச் செலவு உண்டாகாது. ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். கோயில் திருப்பணிகளிலும் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். வியாபாரிகள் கொடுக்கல் - வாங்கலில் சிறிது தாமதம் காண்பீர்கள். விவசாயிகள் மாற்றுப் பயிர் உற்பத்தியில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். அரசியல்வாதிகள் உள்கட்சிப் பூசலில் இருந்து விடுபடுவீர்கள். கலைத் துறையினர் எடுத்த காரியங்களைத் தடை இல்லாமல் முடிப்பீர்கள். பெண்கள் ஆடை, அணிகலன்களை வாங்குவீர்கள்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

திட்டமிட்டபடி தொழிலை நடத்துவீர்கள். எதிர்காலத் திட்டங்களைத் தீட்டுவீர்கள். பகைமை பாராட்டியவர்கள் நட்புடன் பழகுவார்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் பிரச்னைகள் தீரும். வியாபாரிகள் வெளியூர் செல்வீர்கள். விவசாயிகள் தொழிலாளர்களை அனுசரித்து நடப்பீர்கள். அரசியல்வாதிகள் ரகசியங்களைப் பகிரவேண்டாம். கலைத் துறையினர் நம்பிக்கையுடன் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். பெண்கள் குடும்பத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். மாணவர்கள் மூத்தோர் பேச்சைக் கேட்டு நடப்பார்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பொருளாதார நிலை மேன்மை அடையும். போட்டிகளால் பாதிப்பு இராது. பங்கு வர்த்தகத்தில் வருமானம் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கை உயர்த்திக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் பாராட்டுகளைப் பெறுவீர்கள். வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். விவசாயிகள் மாற்றுப் பயிர்களைப் பயிரிடுவீர்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களிடம் அக்கறை செலுத்துவீர்கள். கலைத் துறையினர் பிறருக்கு உதவுவார்கள். பெண்கள் விட்டுக் கொடுத்து நடப்பார்கள். மாணவர்கள் புதிய பாடங்களை விரும்பி படிப்பீர்கள்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

குடும்பத்தினரின் மனம் கோணாமல் நடப்பீர்கள். தொழிலில் போட்டிகள் இருக்காது. சூழ்நிலைகளைப் புரிந்து நடப்பீர்கள். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளை முடித்துவிடுவீர்கள். வியாபாரிகள் வியாபாரத்தை விரிவுபடுத்துவார்கள். அரசியல்வாதிகள் மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவார்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் கணவரின் ஆதரவைப் பெறுவீர்கள். மாணவர்கள் புதிய நண்பர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சொத்துகளில் இருந்து வருமானம் கிடைக்கும். புதிய அனுபவம் கிடைக்கும். அரசு அலுவலர்கள் ஆதரவாக இருப்பார்கள். எதிரிகளின் இடையூறுகளை எதிர்கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களிடம் மேலதிகாரிகள் நட்புடன் நடப்பார்கள். வியாபாரிகள் வியாபாரத்தைப் பெருக்குவார்கள். விவசாயிகள் புதிய முயற்சிகளைச் செயல்படுத்துவார்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணியை செய்து முடிப்பீர்கள். கலைத் துறையினர் பெயரைத் தக்க வைப்பீர்கள்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பலவகைகளில் பணவரவுக்கு வழி செய்வீர்கள். வேலையைத் தடையில்லாமல் முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் நிலவும். மனதுக்கினிய பயணம் மேற்கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரிகளுக்கு கொடுக்கல் - வாங்கலில் இருந்த பிரச்னைகள் தீரும். விவசாயிகள் பழைய கடன்களை அடைப்பீர்கள். அரசியல்வாதிகள் புதிய தீர்வுகளைக் காண்பீர்கள். கலைத் துறையினர் பிறருக்கு உதவி செய்வீர்கள். பெண்கள் சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வீர்கள்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

நேர்வழியில் சிந்திப்பீர்கள். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும். நிலையான வருவாய்க்கான திட்டங்களைத் தீட்டுவீர்கள். பெரியோர் ஆசியைப் பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் சக ஊழியர்களின் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்துவைப்பீர்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் இணைவீர்கள். விவசாயிகள் கால்நடைகளை வாங்குவீர்கள். அரசியல்வாதிகள் கட்சிப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்கள். கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங்களை ஏற்பீர்கள். பெண்களின் மனவளம் சிறக்கும். மாணவர்கள் உடற்பயிற்சிகளைச் செய்வீர்கள்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


மனதில் தெளிவு பிறக்கும். தொழிலில் முன்னேற்றம் அடைவீர்கள். உறவினர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாவீர்கள். தடைபட்ட காரியங்களை நடத்துவீர்கள். உத்தியோகஸ்தர்கள் கொடுக்கப்பட வேலைகளை தள்ளிப் போடாமல் முடித்து விடுவீர்கள். வியாபாரிகள் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். விவசாயிகள் மானியங்களைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளின் எதிரிகளும் நன்மையடைவார்கள். கலைத் துறையினர் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

நெடுநாளைய எண்ணங்கள் ஈடேறும். பொருளாதார நிலை முன்னேற்றம் அடையும். புதிய சேமிப்பில் ஈடுபடுவீர்கள். எடுத்த காரியங்கள் வெற்றி பெறும். உத்தியோகஸ்தர்கள் அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரிகள் வழக்குகளில் வெற்றி பெறுவீர்கள். அரசியல்வாதிகள் எதிர்க்கட்சியினரை அரவணைத்துச் செல்வீர்கள். கலைத் துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் குழந்தைகளை ஆன்மிகத்தில் ஈடுபடுத்துவீர்கள். மாணவர்கள் வீண்வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

# அரசியலாகும் மதம்?

# காங்கிரஸ்டன் இணையும் சங்கர மடங்கள்!



சென்னை மடல்
-பகவான் சிங்-



பல்வேறு சட்டச் சிக்கல்களைத் தாண்டி, பெரும் பொருட்செலவில், அயோத்தியில் கட்டப்பட்டுவரும் இராமர் கோவிலைத் திறந்துவைப்பதன் மூலமாக, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பாலான ஹிந்துக்களின் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என்று நரேந்திர மோடியும் பாஜகவும் மனப்பால் குடித்து வந்தால், அதை எட்டுவதில் ஒரு சவால் உருவாகியுள்ளது. இராமரின் பெயரால் சுயநல அரசியல் ஆதாயங்களைப் பெற மோடி விழைவதாகவும், கோவில் கட்டுமானம் முழுமை பெறாத நிலையில் அவசர கதியில் பிராணப் பிரதிஷ்டை செய்ய முயல்வதாகவும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் குற்றம் சாட்டிவருகிறார்கள்.

காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கர்கே மற்றும் சோனியா காந்தி ஆகியோர், இந்த விழாவிற்கான அழைப்பிதழை ஏற்பதை ‘மரியாதையுடன் மறுப்பதாக’ தெரிவித்திருக்கின்றனர். பிராணப் பிரதிஷ்டையில் நிகழ்வில், மதம் மற்றும் ஆன்மீகத்தைவிட அரசியல் சாயல் அதிகமிருப்பதாக I.N.D.I.A கூட்டணிக் கட்சிகளும் கூறிவருகின்றன. காங்கிரஸ் காந்தி குடும்பத்தின் தலைமையில் அரசியல் தலைவர்கள் எழுப்பும் இந்த எதிர்ப்புக் குரலுடன் நான்கு சங்கராச்சாரியார்களும் இணைந்து, எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிவருகின்றனர். ஆகம சாஸ்திரத்துக்குப் புறம்பாக, நிறைவு பெறாத ஒரு கோவிலில் இராமரின் விக்ரஹத்தை நிறுவி, ஜனவரி 22 அன்று பிராணப் பிரதிஷ்டை செய்வதாகப் பிரதமர் நரேந்திர மோடியைக் குற்றம் சாட்டுகின்றனர்.

பாரம்பரிய முறைப்படி, பிராமண அர்ச்சகர்களைக் கொண்டு சிலை நிறுவலைச் செய்விக்காமல், நரேந்திர மோடி, தானே செய்ய முடிவெடுத்திருப்பது குறித்தும் அதிருப்தி தெரிவித்திருக்கின்றனர் அவர்கள். இந்தப் பிராணப் பிரதிஷ்டை நிகழ்வில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்துள்ள நான்கு சங்கராச்சாரியார்களில் பூரியில் உள்ள பூர்வாம்னய கோவர்தன மடத்தின் சங்கராச்சாரியார் நிஷ்சலானந்த சரஸ்வதியும் ஒருவர். கும்பாபிஷேக

அழைப்பிதழைப் பெற்ற அவர், இது ஓர் அரசியல் நிகழ்வாகிவிட்டதாகக் குறை கூறுகிறார். “நாட்டின் பிரதமர், கருவறைக்குள் நுழைந்து, சிலையைக் கையால் தொட்டுப் பிராணப் பிரதிஷ்டை செய்வது ஓர் அரசியல் நகர்வு என்பது தெளிவு. இராமரின் பிராணப் பிரதிஷ்டை செய்யப்படுவதானால், அது ஆகம விதிகளின் படியே இருக்கவேண்டும். மாறாக நடந்தால், அந்தக் கடவுளின் சக்தி குறைந்து, தீய சக்தி உள்நுழைந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தும்” என்கிறார் அவர்.

ஜனவரி 22 அன்று நடைபெறவிருக்கும் இவ்விழாவைத் தவிர்க்க காங்கிரஸ் எடுத்திருக்கும் முடிவுக்கு, அது ஒரு மத நிகழ்வாக இல்லாமல், தேர்தலை மையப்படுத்திய அரசியல் நகர்வாக ஆக்கப்பட்டிருப்பதே காரணம் என்று அக்கட்சி கூறுகிறது. காங்கிரஸின் ஊடகப் பிரிவின் தலைவர் பவன் கேரா, வெள்ளியன்று செய்தியாளர் சந்திப்பில், “இந்து பாரம்பரிய முறைப்படி இந்த விழா ஏற்பாடு செய்யப்படவில்லை என்பதால் நான்கு சங்கராச்சாரியார்கள் இதைப்

புறக்கணித்திருப்பதே இது ஓர் அரசியல் நிகழ்வு என்பதற்குச் சான்று” என்றார். நிறைவடையாத ஒரு கோவிலில் பிராணப் பிரதிஷ்டை செய்யப்படக் கூடாது என்று நான்கு மடங்களின் சங்கராச்சாரியார்களும் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டிய கேரா, அவர்கள் ராம நவமி (ஏப்ரல் 17) அன்று இந்நிகழ்வு சிறப்பாக நடத்தப்பட வேண்டும் என்று விரும்பியதாகவும் ‘அரசியல் காரணங்களுக்காக’ அது ஒப்புக்கொள்ளப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.



எதிர்க் கட்சிகளின் விமரிசனங்களை பாஜக தலைமை முற்றிலும் புறந்தள்ளியுள்ளது. காங்கிரஸ் தலைமை அயோத்தி அழைப்பிதழை மறுத்துள்ளது, “வரலாற்றின் ஏட்டில் புதிய பக்கங்களைத் திருப்பும் எந்த நிகழ்வையும், தாழ்வு மனப்பான்மை, பிரதமர் மோடியின் மீதான பொறாமை, தீய எண்ணம் ஆகியவை காரணமாகப் புறக்கணிக்கும் அக்கட்சியின் இயல்பையே காட்டுகிறது” என்று பாஜக செய்தித் தொடர்பாளர் சுதான்ஷூ த்ரிவேதி கூறியுள்ளார். மேலும் அவர், “மோடியின் மீதான எதிர்மறை எண்ணம், நாட்டுக்கு எதிரான நிலைப்பாட்டையும், இப்போது கடவுளுக்கு எதிரான நிலைப்பாட்டையும்கூட அவர்கள் எடுக்கும் அளவுக்குக் கொண்டு சென்றுள்ளது” என்று குறிப்பிட்டார்.

இந்த கோஷங்கள் அனைத்தும், 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் பாஜக அளித்த வாக்குறுதியான இராமர் கோவில் நிர்மாணம் என்ற துருப்புச் சீட்டுக்கு எதிரான பிரச்சாரமேயாகும். எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் மோடியைக் கோயில் விவகாரம் குறித்துத் தாக்கிப் பேசி வரும் நிலையில், தேர்தலை முன்னிட்டுத்தான் இந்த நிகழ்வு திட்டமிடப்படுகிறது என்பதைச் சாமானியர்களும் உணராமல் இல்லை. எதிர்க்கட்சிகள் தயார் நிலையில் இல்லாத இப்போதைய சூழலில், தேர்தலை முன்கூட்டியே நடத்த மோடி திட்டமிடுவதாகவும் அரசியல் மற்றும் ஊடக வட்டாரங்களில் பேச்சு அடி படுகிறது. முக்கிய எதிர்க்கட்சிக் கூட்டணியான INDIA கூட்டணி, மோடிக்கும் பாஜகவுக்கும் சமமான, வலுவான ஓர் எதிரணியாக இல்லை என்பதும் வெளிச்சம்.

## யாத்திரையில் தொடரும் ராகுல்

நாட்டின் அடுத்த பிரதமர் யார் என்பதை நிர்ணயிக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய விடயமான, பிரதமர் வேட்பாளர் இன்னார் என்பதுகூடத் தெளிவில்லாத நிலையில் ‘இன்டியா’ கூட்டணி இருக்கிறது. சாமானியனாகட்டும் பெரும் படித்த அறிவாளியாகட்டும், எந்த வாக்காளராயினும் தன் வாக்கு வீணாகிவிடக் கூடாது வரும் பிரதமர் கட்சிக்குத்தான் அது சென்றடைய வேண்டும் என நினைப்பது இயல்பே. தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு, இன்டியா கூட்டணி பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கர்கே வெளிப்படையாக அறிவித்திருக்கிறார். மோடிக்கு எதிரான ஒரு வேட்பாளராக காங்கிரஸின் ராகுல் காந்தியைப் பொது மக்கள் பார்க்கவில்லை என்பதை ஒப்புக் கொள்வதாகவே அவரது அறிவிப்பு ஒலிக்கிறது. இன்னொரு புறம், பல ஊடகக் கருத்துக் கணிப்புகளும் ஆய்வுகளும், பண்டித ஜவஹர்லால் நேருவின் சாதனையைச் சமன் செய்யும் விதமாக, மூன்றாவது முறையாகப் பிரதமராவார் மோடி என்று கூறுகின்றன.

ஆட்சிக்கு எதிரான மன நிலை என்ற அச்சுறுத்தல் மோடிக்கு இருப்பதாகவே தெரியவில்லை. மாறாக, உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியாவை நிலை நிறுத்துவதில் அவர் விரைவில் வெற்றி பெறுவார் என்பது

(14ஆம் பக்கம் பார்க்க)



## நிலவில் கால் பதித்து உலகின் பொருளாதார வல்லரசாகும் இந்தியா!

# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் முன்மொழிவு!


## ஈடேறுமா அல்லது ஈடாடுமா?

**கந்தையா அருந்தவபாலன்**

இலங்கையின் அரசியலமைப்புக்கிணங்க இந்த ஆண்டின் பிற்பகுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தமது வெற்றியை உறுதி செய்வதற்கான பயிற்சிகளில் பிரதான தேசியக் கட்சிகள் மும்முரமாக ஈடுபடத் தொடங்கிவிட்ட போதிலும் அக்களத்தில் தாம் எவ்வாறு விளையாடுவது என்ற ஆரம்பத் தீர்மானத்தைக்கூட இன்னும் எடுக்காத ஒரு நிலையில் தமிழ்த்தரப்பின் காலம் கடந்து சென்று கொண்டிருக்கிறது. இத்தேர்தல் தொடர்பாக இதுவரை வேறுபட்ட இரண்டு முன்மொழிவுகள் தமிழ்க்கட்சிகளால் உச்சரிக்கப்பட்டுள்ளன. ஒன்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள முன்னைய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனால் முன்மொழியப்பட்ட தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துதல். மற்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்மொழியப்பட்ட தேர்தலைப் புறக்கணித்தல். இவை தொடர்பாக ஆழமான கலந்துரையாடல் எவற்றிலும் இதுவரை அக்கட்சிகள் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்து ஏனைய தமிழ்க்கட்சிகளின் தீர்மானம் எதுவாக இருந்தாலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எப்போதுமே புறக்கணிப்பது என்ற கொள்கையைக் கொண்டிருப்பதாலும் அம்முன்னணியில் ஒரு கட்சியே உள்ளதாலும் புறக்கணிப்பது என்ற அக்கட்சியின் முடிவு உறுதியானதாகும். அத்துடன் தமது முடிவு தொடர்பாக ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் கலந்துரையாடுவதற்கும் அக்கட்சியினர் ஆர்வம் காட்டுவார்களா என்பதுவும் கேள்விக்குறி. ஆனால் ஐந்து கட்சிகளைக் கொண்ட ஜனநாயகத் தமிழத்தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள்கூட தமது முன்மொழிவு தொடர்பாக தமக்கிடையே முறையான ஒரு கலந்துரையாடலில் இன்னும் ஈடுபடவில்லை. எனினும் தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான கருத்துகள் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் உட்பட வேறு சில அரசியல் தரப்புகளாலும் ஊடகங்களாலும் பரவலாக முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவுக்கான நோக்கம், அது தொடர்பான ஏனைய தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு, அதன் நடைமுறைச் சாத்தியம் என்பவை கவனத்திற்குரியவையாக அமைகின்றன.

வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரைப் பொது வேட்பாளராக ஏன் நிறுத்த வேண்டும் என்பதற்கு முக்கியமாக இரு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒன்று இத்தேர்தலில் வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு பொது தமிழ் வேட்பாளருக்குத் தமது வாக்குகளை அளிப்பதன் மூலம் தங்கள் அரசியல் அபிலாசைகளை சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்துவதுடன் அதனை அடைவதற்கு ஒன்றுபட்ட மக்கள் திரட்சியாக தாம் எப்போதும் இருந்து வருகிறோம் என்பதையும் வெளிப்படுத்துவது. மற்றது அவ்வாறான ஒரு திரட்சியனூடாக தமது அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கான பேரம்பேசுதலில் ஈடுபடுதல். அதாவது தமிழ்மக்களின் இரண்டாவது விருப்பு வாக்கினூடாக வெற்றி பெறக்கூடிய வேட்பாளருடன் 'கொடுத்து - வாங்கல்' முறையில் பேரம் பேசி உடன்பாடொன்றை எட்ட முயல்வது. இது ஓர் எடுகோளின் அடிப்படையிலான அணுகுமுறையாகும். அதாவது இன்றைய தென்னிலங்கை அரசியல் சூழ்நிலையில் முதன்மை வேட்பாளர்கள் எவரும் முதலாவது சுற்றில் 50 வீதத்திலும் கூடுதலான வாக்கை பெறமாட்டார்கள் என்று கருதப்படுவதால் அவர்களின் வெற்றிக்கு இரண்டாவது விருப்பு வாக்குகளும் அவசியமாக இருக்கும் என்ற எதிர்வு கூறலின் அடிப் படையிலானது.

தமிழர் ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்துவது எவ்வளவுக் குச் சாத்தியமானது? இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கங்களை அடைய வேண்டுமெனில் செலுத்தப்படும் தமிழர் வாக்குக்களில் குறைந்தது 75 சதவீதமேனும் பொதுவேட்பாளருக்குக் கிடைக்கும் நிலை உருவாக வேண்டும். அவ்வாறெனில் தமிழ்த் தேசியக் கட்சிகள் எனக் கூறப்படும் கட்சிகள் மட்டுமன்றி ஏனைய தமிழ்க் கட்சிகளின்



ஆதரவும் இதற்கு அவசியமாகும். இது சாத்தியமானதா? இதனை முன்மொழிந்த சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்களில் இது தொடர்பாகத் தனது கருத்துக்களைத் தெரிவித்து வந்தாலும் தனது கூட்டணிக்கட்சித் தலைவர்களுடன் பயனுறுதியான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாகச் செயதிகளில்லை. அதேபோலவே ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் அதைப்பற்றிப் பேசுவோம் என வவுனியாவில் ஊடகங்களுக்குத் தெரிவித்தாரொழிய மேற்கொண்டு நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. இதே நேரத்தில் பிரதான தமிழ்க்கட்சியான தமிழரசுக்கட்சி இது தொடர்பாக உத்தியோகபூர்வமான அறிவித்தல் எதனையும் விடுக்கவில்லையாயினும் அண்மையில் வடக்குக்கு வந்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கிய ராகுல் ராஜபுத்ர அம்முன்மொழிவை நிராகரித்துள்ளார். அதேபோலவே அக்கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி. கே. சிவஞானம் அவர்களும் இதனை நிராகரித்திருப்பதைக் கொண்டு அக்கட்சியின் நிலைப்பாடு தெளிவாகிறது. அதேபோல தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்து விட்டார். ஏலவே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ரணிலுக்கான தனது ஆதரவைத் தெரிவித்து விட்டார். வடக்கு நிலைமை இப்படியிருக்க கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர்களான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் சதாசிவம் வியாழேந்திரன் போன்றோர் நிச்சயமாக இதனைக் கருத்தில் எடுக்கப் போவதில்லை. நிலைமை இவ்வாறு இருக்கும் போது தமிழ்க் கட்சிகளிடையே இது தொடர்பான ஒத்த கருத்தை ஏற்படுத்துவது எவ்வளவு தூரம் சாத்தியமாகும்? ஒத்த கருத்து ஓரளவு எட்டப்படுகிறது என வைத்துக் கொண் டால்கூட சகல தரப்பினராலும் பொது வேட்பாளராக ஏற்றுக் கொள்ளத்தக்க ஒருவரைக் தேர்ந்தெடுப்பது இலகுவானதா? எல்லாக் கட்சிகளும் கேட்டால் பொது வேட்பாளருக்குத் தான் தயார் என ஒரு நேரத்திலும் கஜேந்திரகு மாரே அதற்குப் பொருத்தமானவர் என இன் னொரு நேரத்திலும் என்றவாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் விக்னேஸ்வரன் பிதற்றினாலும் அதிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகி றது தமிழ் மக்களால் ஏகோபித்தவகை யில் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தலைவரை இன்று சுட்டிக் காட்டுவது எவ்வளவு சிரமமென்று. இதற்கப்பால் அவ்வாறு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி அனைவரையும் அவருக்கு வாக்க ளிக்கச் செய்வதற்கான வல்லமையை தமிழ்த் தேசியக் கட்சிகள் கொண்டுள்ள னவா? பொது வேட்பாளர் தொடர்பில் இவ்வாறு பல தடைகள் ஒருபுறத்தில் காணப்பட மறுபுறத்தில் இதற்கு வேறு உள்நோக்கம் இருப்பதாகச் சில தரப்புக ளால் சுட்டிக்காட்டப்படு



> உண்மையில் தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்களின் முன்வைத்து வெற்றி பெறக்கூடிய வேட்பாளர் ஒருவருக்கு தமிழ் மக்களும் ஆதரவளிக்கும் நிலைமை ஒன்று ஏற்பட்டால் மட்டுமே தீர்வுக்கான கதவுகள் திறப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. அதற்கு இலங்கை மக்களின் சிந்தனை மாறவேண்டும். இப்போதுள்ள அரசியல் தலைவர்களுக்குப் பதிலாக முழுநாட்டையும் நேசிக்கும் ஒரு தேசியத் தலைவர் உருவாகவேண்டும்.

கிறது. அதா வது தமிழ் மக்களின் தீர்மானம் மிக்க வாக்குகளை ரணிலுக்கு எதிரான போட் டியாளருக்குச் செல்ல விடாமல் தடுப்ப தன் மூலம் ரணிலின் வெற்றியை உறுதி செய்வதற்கான ஒரு மறைமுக உத்தியென சுட்டிக்காட்டப்படுகிறது. தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி)க்கான மக்கள் ஆதரவு இன்று கணிசமாக அதிகரித்து வந்தாலும் அதன் வேட்பாளரான அனுர குமார திசநாயக வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக யாராலும் எதிர்வு கூறப்படவில்லை. அதானால் பிரதான போட்டியாளர்களாக சஜித் பிரேதாசாவும் ரணில் விக்ரமசிங்கவுமே இருப்பார்கள் எனக்கருதப்படுகிறது. இந்நிலையில் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் கட்சிகள் இன்றுவரை சஜித் தரப்புடனேயே இணக்கமாக உள்ளன. கடும்போட்டி நிலவக்கூடும் என எதிர்பார்க்கப்படும் இத்தேர்தலில் தீர்மானமிக்க வாக்குகளாக தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் இருக்கும் எனக் கருதப்படுகிறது. ரணிலின் கடந்த செயற்பாடுகள், அவர் மஹிந்த தரப்புடன் சேர்ந்திருத்தல், ரணிலின் வெற்றி தொடர்பான ஐயம் போன்ற பல காரணிகளால் இம்மக்களின் வாக்குகள் ரணில் பக்கம் சாய்வதற்கான வாய்ப்புகள் குறைவு எனக்கருதப்படுவதால் தமிழ் மக்களின் வாக்குகள் சஜித்துக்குச் செல்வதைத் தடுக்கும் ஒரு மறைமுக நிகழ்ச்சிநிரலாகவே தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துதல் என்பது முன்மொழியப்படுவதாக ரணிலின் எதிர்த் தரப்பாளர்களால் கூறப்படுவதையும் நிராகரிக்க முடியாது.

பொது வேட்பாளர் தொடர்பிலான அடுத்த எதிர்பார்ப்பு 'இரண்டாவது விருப்பும் பேரம்பேசுதலும்' ஆகும். இது தொடர்பிலும் பல சவால்கள் காணப்படுகின்றன. மக்களை ஒன்று திரட்ட முடிந்தால் மட்டுமே பேரம் பேசுவதற்கான சாத்தியம் ஏற்படும். அதனால்தான் பிளவுபட்டுப்போய்க் கிடக்கும் இன்றுள்ள தமிழர் அரசியல் நிலைமை யில் மக்களை ஒன்று திரட்டுவதற்கு 1976 இல் மேற்கொள்ளப்பட்ட வட்டுக்கோட்டை தனிநாடு தீர்மானம் போல உணர்ச்சிகரமான ஒரு தீர்மானமாக பொது வேட்பாளர் என்ற கோசம் முன் வைக்கப்படுகிறது. ஆனால் 1977இல் பெற்ற வெற்றி போல பொது வேட்பாளர் உத்தி வெற்றி



யளிக்காது என்ற நிலைமை காணப்படும் போது அதனடிப்படையில் பேரம் பேசுதல் எவ்வாறு சாத்தியமாகும்? தேர்தல் ஒன்றின்போது தமிழ்மக்களுடன் பேரம் பேசுவது, உடன்பாடுகள் காண்பது சிங்கள மக்கள் மத்தியில் எதிர்மறையான பரப்புரைகளுக்கு வழி வகுத்து தமது வெற்றியைப் பாதிக்கும் எனக்கருதுவதால் எந்தவொரு வேட்பாளரும் வெளிப்படையாக அதனைச் செய்ய முன்வருவதில்லை. அவை மறை முகமான கனவான் உடன்படிக்கைகளாகவே இருக்க முடியும். கடந்த காலத்தில் தமிழ்த் தலைவர்களுடன் சிங்களத் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட கனவான் உடன்படிக்கைகளுக்கு என்ன நடந்தது என்பது என்பது ஒருபுறமிருக்க, மறுபுறத்தில் தமிழ்மக்கள் தமது இரண் டாவது விருப்பு வாக்கை குறித்த ஒரு வேட்பாளருக்கு இடுமாறு தமிழ்த் தலைவர்களால் கோரிக்கை விடும்போது குறித்த வேட்பாளருக்கும் தமிழ்த் தரப்புக்கும் இடையில் ஏதோ இரகசிய உடன்பாடு உள்ளது என்ற ஐயம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டு இன்னும் பாதகமான நிலைமையை அல்லவா அவ்வேட்பாளருக்கு ஏற்படுத்தும். இந்நிலையில் வெற்றிகரமான பேரம் பேசுதல் எவ்வாறு சாத்தியமாகும்?

இவ்வாறு தமிழர் தரப்பிலும் சிங்களவர் தரப்பிலும் நேரெதிரான பலவீனங்களும் ஐயங்களும் நிலவும் ஓர் சூழ்நிலையில் இத்தகைய அணுகுமுறைகள் ஒருபோதும் வெற்றியைத் தரப்போவதில்லை. உண்மையில் தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்களின் முன்வைத்து வெற்றி பெறக் கூடிய வேட்பாளர் ஒருவருக்கு தமிழ் மக்களும் ஆதரவளிக்கும் நிலைமை ஒன்று ஏற்பட்டால் மட்டுமே தீர்வுக்கான கதவுகள் திறப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. அதற்கு இலங்கை மக்களின் சிந்தனை மாறவேண்டும். இப்போதுள்ள அரசியல் தலைவர்களுக்குப் பதிலாக முழுநாட்டையும் நேசிக்கும் ஒரு தேசியத் தலைவர் உருவாகவேண்டும். அண்மிய எதிர்காலத்தில் அதற்கான வாய்ப்புகள் தென்படவில்லை என்பதுதான் இந்நாட்டின் சாபக்கேடு.

# கதிரைக்காக அலையும் அரசியலில் கட்சி என்னடா? கொள்கை என்னடா?

**பனங்காட்டான்**





அகில இலங்கை தமிழ் காங்கிரசிலிருந்து பிரிந்தவர்களால் திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்ட அகில இலங்கை தமிழரசுக் கட்சி (ஆங்கிலத்தில் பெடரல் கட்சி என்று அழைப்பர்) முதன்முதலாக ஒரு திருப்புமுனையில் இப்போது நிற்கிறது.

1949 டிசம்பர் 19ம் திகதி உருவாக்கப்பட்ட இந்தக் கட்சி இந்தாண்டு இறுதியில் அதன் எழுபத்தைந்தாவது ஆண்டு விழாவை கொண்டாடவிருக்கும் வேளையில், அதன் தலைவர் தெரிவுக்கான போட்டி கட்சியின் எதிர்காலத்தை அகண்ட கேள்விக்குறியின் முன்னால் நிறுத்தியுள்ளது.

தமிழரசுக் கட்சிக்கென தனியான சில பாரம்பரியங்கள் உண்டு. கட்சியின் தலைமைப் பதவிக்கு ஒருபோதும் போட்டி இருந்ததில்லை. வடக்கு கிழக்கு என்ற பாகுபாடின்றி ஒருமனதாக தலைவர் தெரிவு இடம்பெறும். கட்சியின் வளர்ச்சிக்காக கொள்கைப் பிடிப்புடன் செயற்படுபவர்களே தலைவர்களாக தெரியப்பட்டு வந்துள்ளனர். இவ்விடயத்தில் பல விட்டுக்கொப்புகள் இடம்பெற்றுள்ளன. எந்த நெருக்கடி வேளையிலும் தலைவரின் முடிவே இறுதியானதாக ஏற்றுக்கொள்ளப்படும்.

அந்தக் காலம் போய்விட்டது என்பதை நிரூபிப்பது போன்று இன்று தலைமைப் பதவிக்கு போட்டி ஏற்பட்டுள்ளது. வடக்கிலிருந்து சிவஞானம் சிறீதரனும், எம்.ஏ.சுமந்திரனும், கிழக்கிலிருந்து சீ.யோகேஸ்வரனும் அவர்களது ஆதரவாளர்களால் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சுமார் ஒரு தசாப்தமாக தலைமைப் பதவி தமிழரசின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான மாவை சேனாதிராஜா வசம் இருந்ததால் இம்முறை இப்பதவி கிழக்குக்கு கிடைக்க வேண்டும். ஆனால் அதற்கான சாத்தியம் காட்டப்படவில்லை. இதற்கு வடக்கின் போட்டியாளர் இருவரில் ஒருவர்கூட இணக்கம் காட்டவில்லை. அதேசமயம் தலைமைப் பதவி போட்டியால் கட்சி பிளவுபடக்கூடாது என்று கருதிய யோகேஸ்வரன் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்து தமது ஆதரவை சிறீதரனுக்கு வழங்குவதாக பகிரங்கப்படுத்தினார்.

போட்டியாளர்களில் இருவர் ஒன்றாக இணைந்ததால், கட்சியின் ஒற்றுமையைக் கருதி சுமந்திரன் போட்டியிலிருந்து விலகி சிறீதரனை தலைவராக்க ஆதரவளிப்பாரென பலரும் எதிர்பார்த்தனர். இது நடைபெறாததால் போட்டியாளர்கள் மூவரும் ஒன்றாகக் கூடி முடிவெடுப்பரென சம்பந்தனின் கொழும்பு இருப்பிடத்தில் கடந்த பத்தாம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் பதினோராம் திகதி மூன்று போட்டியாளரும் தனிமையில் கூடினராயினும் இருபது நிமிடங்களில் கூட்டம் முடிவடைந்துவிட்டது.

சுழற்சி முறையில் முதல் இரண்டு வருடங்களை தமக்குத் தருமாறு சிறீதரன் நேரடியாக சுமந்திரனிடம் கேட்டாராயினும் அதனை அவர் அடியோடு மறுத்துவிட்டதால், இந்த மாதம் 21ம் திகதி தலைவர் தெரிவுக்கான வாக்களிப்பு இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

தலைவர் பதவியில் களமிறக்கப்பட்ட மூவரும் 2010ம் ஆண்டுத் தேர்தலிலேயே எம்.பிக்களானவர்கள். சிறீதரன் 2010, 2015, 2020 தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். யோகேஸ்வரன் முதல் இரண்டு தேர்தல்களில் வெற்றி பெற்றாராயினும் 2020 தேர்தலில் வெற்றி பெறவில்லை. சுமந்திரன் சம்பந்தனால் கொழும்பிலிருந்து இறக்கப்பட்டு 2010ல் தேசியப் பட்டியல் ஊடாக நியமனம் ஆனவர். 2015 தேர்தலில் போட்டியிட்டு வென்ற இவர் 2020 தேர்தலில் பெரும் சவாலை சந்தித்தவர்.

இறுதியில் சிறீதரனுடன் தோழமை கொண்டு அவரின் இரண்டாவது வாக்குகளை தமக்குப் பெற்று வெற்றி பெற்றாராயினும் 2015ம் ஆண்டுத் தேர்தலில் பெற்ற வாக்குகளைவிட ஐம்பது வீதத்துக்கும் குறைவானதையே பெற முடிந்தது. இத்தேர்தலில் சிறீதரனின் ஆதரவு கிடைத்திருக்காவிடில் சுமந்திரன் தோல்வியடைந்திருப்பார் என்பது கட்சியின் உள்வீட்டுக்காரர்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் தெரியும்.

இத்தேர்தல் நடைபெற்றபோது சுமந்திரன் சிறீதரனுக்கு அளித்த வாக்குறுதி பரகசியமானது. கட்சியின் அடுத்த தலைவர் தெரிவின்போது தனது நன்றிக்கடனாக தமது ஆதரவை வழங்குவதாகக் கூறியதன் அடிப்படையிலேயே சிறீதரன் தலைமைப் போட்டியில் நம்பிக்கையோடு இறங்கினார். ஆனால் அந்த நன்றிக் கடனை செலுத்தத் தவறியது மட்டுமன்றி சிறீதரனுக்குப் போட்டியாக சுமந்திரன் களத்தில் இறங்கியது விருப்புக்குரியதாக அமையவில்லை.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் போட்டியை தமிழர் அரசியலுடன் மட்டும் இணைத்துப் பார்க்காது தெற்கின் அரசியல் போக்குடனும் இணைத்துப் பார்க்க வேண்டியது அவசியமாகியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவையும் சஜித் பிரேமதாசவையும் ஒன்றிணைத்து சிங்கள அரசியலை மேலெழுப்பும் முயற்சி இப்போது தீவிரமாக இடம்பெறுகிறது. இவ்விடயத்தில் இரண்டு நாடுகள் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றன. முக்கியமாக இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இவ்விடயத்தை தம் பொறுப்பில் எடுத்து லாவகமாக கையாண்டு வருகிறார்.

ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பி வைத்த அறகலய போராட்டத்தில் ஜூலி சங்கின் வகிபாகம் எவ்வாறு இருந்தது என்பதை சர்வதேசமும் அறியும். விரைவில் இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பிக்கு தெற்கில் ஆதரவு அதிகரித்து வருவதாக காணப்படும் சூழ்நிலையைபிட்டு அமெரிக்கா மகிழ்வடையவில்லை. இந்தப் பின்னணியில், ரணிலையும் சஜித்தையும் மீண்டும்



ஒன்றாக இணைத்து இயங்க வைத்து ஜே.வி.பியை ஓரங்கட்ட வேண்டுமென்பதில் ஜூலி சங் தீவிரமாக செயற்பட்டு வருவதை பல ஊடகங்கள் வெளிப்படுத்தி வருகின்றன.

ரணிலும் சஜித்தும் ஓரணியில் முறையே ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் இணைந்து ஆட்சியை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலையில் சஜித்தினூடாக முக்கிய அமைச்சர் பதவி ஒன்று தமக்கே என்ற நம்பிக்கையில் சுமந்திரன் இருப்ப

> “இந்த வருடம் எழுபத்தைந்தாவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடவுள்ள அகில இலங்கை தமிழரசுக் கட்சி, அதற்கான புதிய தலைவர் தெரிவுப் போட்டியால் பிளவுண்டு போய்விடுமோ என்ற அச்சம் அதன் உறுப்பினர்கள் மத்தியில் மட்டுமன்றி அனைவர் மட்டத்திலும் ஏற்பட்டுள்ளது. கொழும்பில் ஓடித்திரிந்த ஓணானை இழுத்து வந்து மடியில் போட்டுவிட்டு கடிக்குது கடிக்குது என்றால்.....”

தாக கொழும்பின் உயர்மட்டங்களில் கூறப்பட்டு வருகிறது. சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராக கதிர்காமர் இருந்தது போன்று, சஜித் பங்கேற்கும் ரணில் ஆட்சியில் வெளியுறவுத்துறை அமைச்சர் பதவி தமக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கையில் சுமந்திரன் இயங்குகிறார். இந்த அமைச்சைப் பெற வேண்டுமென்றால் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியை தமக்குரியதாக்கும் முனைப்பில் அவர் வெறி கொண்டவராக காணப்படுகிறார்.

2010ல் சுமந்திரனை கொழும்பிலிருந்து இறக்கியபோதே தமிழரசின் எதிர்காலம் பற்றி அதன் உள்வட்டத்தில் அரசல்புரசலாக பல விடயங்கள் பேசப்பட்டன. தமிழரசுக் கட்சிக்குள் சட்டத்துறையும் ஆங்கிலப் புலமையும் உள்ளவர்கள் குறைவாக இருப்பதால் கட்சியின் தலைமையை குறிவைத்தே இவர் உள்நுழைவதாகக் கூறப்பட்டது. கட்சியின் மூத்த தலைவர் சம்பந்தனின் அனுசரணை இவருக்கு இருந்ததால் குறுகிய காலத்தில் கட்சியினதும் கூட்டமைப்பினதும் முடிவுகளை தீர்மானிப்பவராகவும் இவர் தம்மைத் தாமே உயர்த்திக் கொண்டார்.

கட்சியின் தலைமைப் பதவிக்கு சட்டமும் ஆங்கிலமும் அவசியமானவை என்று சொல்ல முடியாது என்பதற்கு உதாரணமாக 1970-1977 காலத்தை எடுத்துக் கூறலாம். 1970 தேர்தலில் ஜி.ஜி.பொன்னம்பலம், அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், வி.நவரத்தினம் போன்ற அதிசிறந்த சட்டவாளர்கள் வெற்றி பெறவில்லை. அவ்வேளை தமிழரசுக் கட்சியின் குழுத்தலைவராக உடுவில் எம்.பியான வி.தர்மலிங்கம் (சித்தார்த்தனின் தந்தை) இயங்கினார். இவர் ஒரு சட்டவாளர் அல்ல. மிகுந்த ஆங்கிலப் புலமையாளரும் அல்ல. ஆனால், அவ்வேளை நாடாளுமன்றத்தின் சகல விவாதங்களையும் எதிர்க்கட்சித் தரப்பில் தொடக்கி வைத்து இவர் ஆற்றிய உரைகள் நாடாளுமன்றத்தில் பலருக்கும் பிரமிப்பை ஏற்படுத்தியது. தமிழர் தரப்புக்கு சகல வழிகளிலும் சிறந்த தலைவராகவே இவர் கணிக்கப்பட்டார். இதனை இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம் சட்டமும் ஆங்கில அறிவும் உள்ளவர்களே கட்சியை வழிநடத்தவும், தலைமை தாங்கவும் கட்டாயமில்லை என்பதற்காக.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட ‘புலம்பெயர்ந்த தமிழர்களின் செய்திகள்; என்ற அமைப்பு கடந்த ஓரிரு நாட்களாக ஆங்கிலத்திலும் தமிழிலும் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளது. சுமந்திரன் பற்றி இதில் தெரிவிக்கப்பட்டுள்ள சில வரிகள் இன்றைய காலத்தில் அவதானிப்புக்குரியவை. அவைகளை இங்கு பார்க்கலாம்:

- சுமந்திரன் ஒரு கொழும்புத் தமிழர் என்பதையும் அவருக்கு சிங்கள சம்பந்திகள் இருப்பது என்பதையும் புறக்கணிக்க முடியாது. அவரது அரசியல் நிகழ்ச்சிநிரல் விக்னேஸ்வரனைப் போலவே அரை சிங்கள சந்ததியினரின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பதாகத் தெரிகிறது.
- சுமந்திரனின் சூழ்ச்சிப் போக்கு கள் மற்றும் அவரது அறிக்கைகள் வெவ்வேறு பார்வையாளர்களுக்கு ஏற்றவாறு வடிவமைக்கும் திறன் குறித்து கவலைகள் உள்ளன. இது தமிழ் மக்கள் மீதான அவரது நேர்மை குறித்து கேள்விகளை எழுப்புகிறது.
- சுமந்திரனின் தலைமைத்துவப் பண்புகளின் குறைபாடு தெளிவாகத் தெரிகிறது. அவர் ஓர் உண்மையான தலைவரை விட சிங்களவர்களுக்கு மிகவும் பொருத்தமான பண்புகளைக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. அவரது கவனம் முதன்மையாக சிங்கள சமூகத்தின் நலன்களைச் சுட்டியே உள்ளது.

கூட்டிக் கழித்துப் பார்க்கப்போனால் புலம்பெயர் தமிழரின் செய்திகள் சுமந்திரன் பற்றி அறிந்தவைகளை நேரடியாக சுட்டுகின்றது. தமிழரசுக் கட்சி அதன் எழுபத்தைந்தாவது வயதில் கட்சியையும் அதன் கொள்கைகளையும் கைவிட்டு கதிரைக்காக அலையும் திரிகரணசுத்தி அற்றவர்களின் கைகளில் சென்றுவிடுமோ என்ற அச்சம் பலரிடமும் இருப்பதை இந்த அறிக்கை ஊடாக பார்க்க முடிகிறது. தலைமைத் தேர்தல் முடிவு ஏதோ ஒருவகையில் தமிழரசுக் கட்சியை பிளந்துவிடக் கூடுமென்றே அக்கறையுள்ள பலரும் அஞ்சுகின்றனர். கொழும்பில் ஓடித்திரிந்த ஓணானை இழுத்து வந்து மடியில் போட்டுவிட்டு கடிக்குது கடிக்குது என்றால்.....

●

ஈழநாடு



# தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தலும் தமிழர் அரசியலின் எதிர்காலப் போக்கும்



வீரகத்தி தனபாலசிங்கம்

தென்னிலங்கையில் அரசியல் கட்சிகள் அனேகமாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதி தேர்தலுக்கு தங்களைத் தயார்படுத்துவதில் இறங்கியிருக்கும் நிலையில் தமிழர் அரசியலில் ஒரு கட்சியின் தலைவர் தெரிவு முன்னென்றும் இல்லாத கவனத்துக் குரியதாகியிருக்கிறது.

திருகோணமலையில் இம்மாத இறுதியில் இலங்கை தமிழரசு கட்சியின் மகாநாட்டுக்கு முன்னதாக அடுத்த ஞாயிற்றுக்கிழமை (ஜனவரி 21) நடைபெறவிருக்கும் தலைவர் தேர்தலே அதுவாகும்.

தமிழரசு கட்சியின் 75 வருடகால வரலாற்றில் இதுவரையில் ஏகமனதாகவே தலைவர் தெரிவு இடம்பெற்றுவந்திருக்கிறது. அதன் தாபகத் தலைவர் தந்தை செல்வா விரும்பியிருந்தால் தனது ஆயுட்காலம் வரைக்கும் கட்சியின் தலைவராக பதவி வகித்திருக்கமுடியும். ஆனால், அவர் அரசியல் கண்ணியத்துடன் ஒரு தடவை மாத்திரம் தலைவராக இருந்துவிட்டு வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் சேர்ந்த அரசியல்வாதிகள் மாறி மாறி கட்சியின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் வரக்கூடியதாக ஒரு ஏற்பாட்டை வகுத்தார்.

வடக்கைச் சேர்ந்தவர் தலைவராக தெரிவானால் கிழக்கைச் சேர்ந்தவர் பொதுச் செயலாளராக வருவார். கிழக்கைச் சேரந்தவர் தலைவராகும்போது வடக்கைச் சேர்ந்தவர் பொதுச் செயலாளராவார். இந்த தெரிவுகள் எப்போதுமே பொதுச்சபையில் கருத்தொருமிப்பின் அடிப்படையில் இடம்பெறுவதை தமிழரசு கட்சி பாரம்பரியமாகப் பேணி வந்திருக்கிறது.

ஒரு தடவை மாத்திரம் அதாவது 1973 ஆம் ஆண்டில் முன்னாள் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கமும் அன்றைய மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்லையா இராசதுரையும் தலைவர்களாக வருவதற்கு போட்டி போடுகின்ற ஒரு நிலை தோன்றியபோது தந்தை செல்வா இராசதுரையை விட்







டுக்கொடுக்க இணங்கவைத்ததாக கூறப்பட்டது.

அந்த கட்டத்தில் கட்சியின் தலைவராக அமிர்தலிங்கம் வருவதையே தந்தை செல்வா விருப்பியதாக நம்பப்பட்டபோதிலும் , இராசதுரைக்கு ஒரு வாய்ப்பைக் கொடுப்பதற்கு விரும்பியிருந்தாலும் கூட விட்டுக்கொடுக்குமாறு அமிர்தலிங்கத்தை இணங்கவைக்க அவரால் இயலுமாக இருந்திருக்குமா என்பது சந்தேகமே.

1970 களில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணி உருவாக்கப்பட்ட பிறகு 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானம்,1977 ஜூலை பொதுத்தேர்தல், 1983 கறுப்பு ஜூலை, ஆயுதப்போராட்டம் ஆகியவற்றைத் தொடர்ந்து வந்த கொந்தளிப்பான சூழ்நிலைகளில் தமிழரசு கட்சி பற்றி எவரும் பேசவில்லை.

உள்நாட்டுப் போரின் மத்தியிலான கணிசமான காலகட்டத்திலும் தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியே முக்கியத்துவம் குறைந்துபோன நிலையிலும் கூட தமிழரின் மிதவாத அரசியல் முகமாக தொடர்ந்து விளங்கியது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்வேறு தமிழ் கட்சிகளை மீண்டும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு முதன் முதலாக எதிர்நோக்கிய 2001 டிசம்பர் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டது.

பிறகு கூட்டணியின் தற்போதைய தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்கம் ஆனந்தசங்கரியுடன் ஏற்பட்ட வேறுபாடுகளை அடுத்து உதய சூரியன் சின்னம் தொடர்பில் மூண்ட சர்ச்சை காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழரசு கட்சியின் வீடு சின்னத்தில் 2004 ஏப்ரில் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டியேற்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த சகல பொதுத் தேர்தல்களையும் கூட்டமைப்பு வீடு சின்னத்திலேயே சந்தித்தது.

தமிழரசு கட்சியே தமிழ் தேசிய கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் பழமையானதாகவும் வடக்கிலும் கிழக்கிலும் ஆதரவைக் கொண்ட பெரிய தமிழ்க் கட்சியாகவும் இருந்த காரணத்தாலும் தொடர்ச்சியாக தேர்தல்களில் கூட்டமைப்பு வீடு சின்னத்தில் போட்டியிட்டு வந்ததாலும் அந்த கட்சிக்கு மீண்டும் ஒரு தன்முனைப்பான வகிபாகம் கிடைக்கக்கூடியதாக இருந்தது.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் குறிப்பாக ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியலுக்கு வந்த இயக்கங்களின் தலைவர்கள் தமிழரசு கட்சி ஆதிக்கம் செலுத்தும் போக்குடன் நடந்துகொள்வதாக அதிருப்தியை வெளிப்படுத்தத் தொடங்கினார்கள். கூட்டமைப்பை தனியான சின்னத்தின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யவேண்டும் என்று அவர்கள் இடையறாது விடுத்துவந்த வேண்டுகோளை தமிழரசு தலைவர் இரா. சம்பந்தன் (அவரே கூட்டமைப்பின் தலைவராக இருந்தபோதிலும் கூட ) ஒருபோதும் கருத்தில் எடுக்கவில்லை. அதனுடன் சேர்த்து வேறு முரண்பாடுகளும் நாளடைவில் கூட்டமைப்பில் விரிசலை ஏற்படுத்தின.

தங்களுடன் இணைந்து தேர்தல்களில் போட்டியிடாவிட்டால் ஏனைய கட்சிகளினால் ஆசனங்களைப் பெறமுடியாது என்ற எண்ணத்தை தமிழரசு தலைவர்கள் வளர்த்துக் கொண்டார்கள் என்றுதான் கூறவேண்டும். கடந்த வருடம் முற்பகுதியில் நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த உள்ளூராட்சி தேர்தல்களில் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டு முடிவுகள் வெளியான பிறகு கிடைக்கும் ஆசனங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு வடக்கு, கிழக்கில் உள்ளூராட்சி சபைகளை அமைப்பதற்கு கூட்டுச் சேரலாம் என்று ஒரு யோசனையையும் சில தமிழரசு தலைவர்கள் முன்வைத்தனர். மற்றைய அங்கத்துவக் கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி தனியான கூட்டணியாக வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன.

தமிழ் மக்கள் மத்தியில் தங்களுக்கு இருக்கக்கூடிய செல்வாக்கை அறிந்துகொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக அந்த உள்ளூாராட்சி தேர்தல்களை அந்த கட்சிகள் மாத்திரமல்ல தமிழரசும் கூட எதிர்பார்த்தது. ஆனால் தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டதால் அதற்கு வாய்ப்பு இருக்கவில்லை.

இன்று தமிழ் அரசியல் சமுதாயம் சிதறிக்கிடக்கிறது.பல கட்சிகள். பல தலைவர்கள். தங்களுக்கு பின்னால் எத்தனை உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாது. தமிழரசு கட்சியிலும் ஐக்கியம், கட்டுக்கோப்பு என்று எதுவும் இருப்பதாக கூறமுடியாது. அதன் முக்கியஸ்தர்கள் தங்களுக்கென்று உருவாக்கிக்கொண்ட வெவ்வேறு கூடாரங்களின் ஒரு முகாமாகவே அது விளங்குகிறது.

இவ்வாறான ஒரு பின்புலத்திலேயே தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தல் பற்றிய இன்றைய பரபரப்பை நோக்க வேண்டியிருக்கிறது.

சம்பந்தன் அவர்களை அடுத்து 2014 ஆம் ஆண்டில் தமிழரசு கட்சியின் தலைவராக ஏகமனதாக தெரிவான மூத்த அரசியல்வாதி மாவை சேனாதிராஜா கடந்த பத்து வருடங்களாக அந்த பதவியில் இருந்துவருகிறார். அவரின் தலைமையின் கீழ் கட்சியின் மகாநாடு நீண்டகாலமாகக் கூட்டப்படவில்லை. அவரின் இடத்துக்கு ஒருவரை கருத்தொருமிப்பின் அடிப்படையில் தெரிவு செய்யமுடியாத காரணத்தினாலேயே மகாநாட்டுக்கு முன்னதாக அடுத்த வாரம் தேர்தல் நடைபெறவிருக்கிறது. தமிழரசு கட்சியின் வரலாற்றில் இதுவே தலைவர் பதவிக்கான முதன் முதலான தேர்தல். அதில் பொதுச்சபையின் 275 உறுப்பினர்களே வாக்காளர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர்களான மதியாபரணம் ஆபிரஹாம் சுமந்திரனும் சிவஞானம் சிறீதரனும் சீனித்தம்பி யோகேஸ்வரனும் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

இவர்களில் சுமந்திரனும் சிறீதரனும் ஒரே காலத்தில் பாராளுமன்றப் பிரவேசம் செய்தவர்கள். ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரன் 2010 ஏப்ரில் பொதுத்தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்றம் வந்து பிறகு 2015 ஆகஸ்ட், 2020 ஆகஸ்ட் பொதுத் தேர்தல்களில் கூட்டமைப்பின் வேட்பாளராக யாழப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்றத்துக்கு தெரிவானார். கடந்த 14 வருடங்களாக அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார்

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் முன்னாள் அதிபரான சிறீதரன் 2010, 2015, 2020 பொதுத் தேர்தல்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் கூட்டமைப்பின் வேட்பாளராக போட்டியிட்டு தொடர்ச்சியாக பாராளுமன்றத்துக்கு தெரிவானார். அவருக்கும் 14 வருட பாராளுமன்ற அனுபவம்.

யோகேஸ்வரன் 2010, 2015 பொதுத்தேர்தல்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டமைப்பின் வேட்பாளராக போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவாகி பத்து வருடங்கள் உறுப்பின ராக இருந்தார்.

தமிழரசு கட்சியின் பாரம்பரியத்தின் பிரகாரம் ஏகமனதாக தலைவரை தெரிவு செய்வதற்கு இந்த மூவருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியாவிட்டால் கட்சியின் வேறு ஒரு மூத்த முக்கியஸ்தரை தலைவராக ஏகமனதாக தெரிவுசெய்ய முயற்சிப்பதே கட்சியின் நலன்களுக்கு உகந்தது என்ற யோசனை சில தரப்பினரால் முன்வைக்கப்பட்டது.

சுமந்திரன் மூன்று வாரகால வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு தமிழரசு கட்சியின் செயற்குழுவின் கூட்டம் கடந்த வாரம் சம்பந்தன் அவர்களின் கொழும்பு இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தினத்துக்கு முதல் நாளே நாடுதிரும்பினார்.

தேர்தலில் வெற்றி பெறுபவருடன் மற்றவர் கட்சியின் நலன்களைக் கருத்திற்கொண்டு ஒத்துழைத்துச் செயற்பட உறுதி பூண்டிருப்பதாக சுமந்திரனும் சிறீதரனும் முன்கூட்டியே அறிவித்திருந்தார்கள்.

(11ஆம் பக்கம் பார்க்க)



# தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தலும் தமிழர் அரசியலின் எதிர்காலப் போக்கும்



(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியைப் பிளவுபடுத்தக் கூடிய எந்த நடவடிக்கையிலும் இறங்கப்போவதில்லை என்று அவர்கள் கூறினார்கள்.

கட்சி உறுப்பினர்களின் சில கூட்டங்களில் ஏற்கெனவே உரையாற்றிய சுமந்திரன் கிழக்கில் காரைதீவில் கூட்டமொன்றில் வைத்து தனக்கு இவ்வருடம் 60 வயதாகிறது என்றும் 65 வயதானதும் அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிடப் போவதாகவும் கூறினார்.

அதேவேளை கிழக்கில் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் தனக்கு ஆதரவுதேடச் சென்ற சீறீதரன் ஆங்கில அறிவும் சட்ட அறிவும் மாத்திரம் தலைவராகுவதற்கு போதுமான தகுதிகள் அல்ல, அந்த இரு துறைகளிலும் புலமை இல்லாத பலர் சிறந்த அரசியல் தலைவர்களாக திகழ்ந்து மக்களுக்கு பெருஞ் சேவை செய்ததை வரலாற்றில் கண்டிருக்கிறோம் என்று செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார். காமராஜர், கருணாநிதி,எம்.ஜி.ஆர். பிரேமதாச என்று உதாரணங்களையும் அடுக்கினார்.

ஆங்கில அறிவும் சட்ட அறிவும் கொண்ட சேர்.பொன் இராமநாதன், ஜீ.ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வா, அமிர்தலிங்கம் ஆகியோரின் காலத்தில் தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கவில்லையே என்றும் அவர் கூறினார்.

அதற்கு முன்னதாக, யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைக்காட்சி சேவையொன்றுக்கு பேட்டியொன்றை அளித்த வட மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் சுமந்திரனையும் விட தமிழரசு கட்சியின் தலைவராகுவதற்கு சிறீதரன் தகுதி வாய்ந்தவர் என்றும் அவருக்கு ஆங்கில அறிவு குறைவாக இருந்தாலும் ஆற்றல்வாய்ந்த மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக்கொண்டு சிறப்பாக செயற்பட முடியும் என்றும் கூறினார்.

சுமந்திரன் சட்டக்கல்லூரியில் நீதியரசரின் மாணவன். தனது மாணவன் தமிழரசின் தலைவராக வருவதை தான் விரும்பவில்லை என்பதை வெளிப்படையாகவே அவர் காட்டிக்கொண்டார்.

அதுபோக, உண்மையில் சிறீதரன் ஆங்கில, சட்ட அறிவு குறித்து அவ்வாறு கருத்தை வெளியிட்டிருக்கவேண்டிய தேவையில்லை. அவருக்கு ஆங்கில அறிவு குறைவு என்பதால் தமிழரசு கட்சியின் தலைவராக வரமுடியாது என்று யாரும் பகிரங்கமாக கூறியதில்லை. அவர் விரும்பினால் இப்போது கூட சட்டக்கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு எந்த தடையும் கிடையாது.

இது இவ்வாறிருக்க, நீண்ட நாட்களுக்கு பிறகு கடந்த செவ்வாய்கிழமை பாராளுமன்றம் வந்த சம்பந்தன் அவர்களை சிறீதரன் சந்தித்துப் பேசினார். திருகோணமலை தமிழரசு கட்சிக் கிளை உறுப்பினர்கள் தெரிவில் தனது ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டதாக குற்றஞ்சாட்டிய சம்பந்தன் அந்த குறைபாடு சீர்செய்யப் படும்வரை கட்சியின் மகாநாட்டை ஒத்தி வைப்பதற்கு முயற்சிக்கிறார் என்ற ஒரு சந்தேகம் நிலவிய பின்னணியில் அவர் மகாநாடு திட்டமிட்டபடி நடைபெறவேண்டும் என்றும் தலைவர் தெரிவில் கட்சியின் பாரம்பரியம் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் சிறிதரனிடம் கூறினார்.

பொதுச்சபையில் கருத்தொருமிப்புடன் தலைவர் தெரிவாகக்கூடிய சூழ்நிலையை உருவாக்கும் அரசியல் வலிமை சம்பந்தனிடம் தற்போது இல்லை.

மறுநாள் புதன்கிழமை அவரின் வாசஸ்தலத்தில் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலும் ஏகமனதாக தலைவரைத் தெரிவு செய்வதற்கு மூன்று வேட்பாளர்களையும் இணங்க வைக்க முடியவில்லை. இறுதியில் சுமந்திரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மூவரும் கலந்துபேசி ஒரு முடிவுக்கு வருவதற்கு ஒரு நாள் அவகாசம் வழங்கப்பட்டது.


ஆனால், மூவரும் மறுநாள் பாராளுமன்றத்துக்கு அண்மையாக மாதிவெலவில் சிறீதரனின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தபோதிலும் இணக்கப்பாட்டுக்கு வரமுடியவில்லை அதனால் தலைவரைத் தெரிவுசெய்வதற்கு தேர்தல் நிச்சயம் என்றாகிவிட்டது.

சிறீதரனை ஆதரிக்கப்போவதாக ஏற்கெனவே அறிவித்திருந்த யோகேஸ்வரன் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவிக்கப் போவதில்லை என்றும் பொதுச்சபையில் வைத்து தனது ஆதரவாளர்களிடம் சிறீதரனுக்கு வாக்களிக்குமாறு கேட்கப்போவதாகவும் யோகேஸ்வரன் கூறியதாக இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருந்த தருணத்தில் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

**எதிர்காலப் போக்கு**

இந்த இருவரில் எவர் தமிழரசு கட்சியின் தலைவராக வந்தாலும், தற்போதைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளில் தமிழர் அரசியலை வழிநடத்தும் கூட்டுப் பொறுப்புக்கு எவ்வாறு பங்களிப்பை வழங்கப் போகிறார்கள் என்பதே முக்கியமான கேள்வி.

தமிழர் அரசியலின் செல்நெறியைத் தீர்மானிப்பதில் தமிழரசு கட்சிக்கே தனியான பங்கு இருப்பதாக கூறமுடியா







**தமிழரசு கட்சியின் வரலாற்றில் முதற்தடவையாக தலைவரை தலைவரை தெரிவு செய்வதற்கு தேர்தல் இடம்பெறுகிறது. 1973 ஆம் ஆண்டில் அமிர்தலிங்கமும் இராசதுரையும் தலைவர் பதவிக்கு போட்டிபோடும் சூழ்நிலை வந்தபோது தந்தை செல்வா இராசதுரையை இணங்கவைத்து விட்டுக்கொடுக்கச் செய்தார்.**

விட்டாலும், அதற்கு மற்றைய தமிழ்க் கட்சிகளை விடவும் கூடுதலான பாத்திரம் இருக்கிறது. உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த 15 வருட காலத்திலும் அந்த பாத்திரத்தை எந்தளவுக்கு பயனுறுதியுடையதாக அந்த கட்சி கையாண்டிருக்கிறது என்பதை இச்சந்தர்ப்பத்தில் ஒரு தடவை நாம் திரும்பிப் பார்க்கவேண்டும்.

போரின் முடிவுக்குப் பிறகு வடக்கு, கிழக்கு தமிழர்கள் மத்தியில் கட்டுறுதியான அரசியல் சமுதாயம் ஒன்று இருக்காத நிலையில் அவர்களுக்கு தலைமை தாங்கும் பாத்திரம் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் தானாகவே வந்துசேர்ந்தது. கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சி என்ற முறையில் அதில் கூடுதல் பொறுப்பு தமிழரசு கட்சிக்கும் அதன் அன்றைய தலைவர் சம்பந்தனுக்குமே இருந்தது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலைவரங்களுக்கு ஏற்றமுறையில் தமிழர்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான வரலாற்று முக்கியத்துவ பாத்திரம் அவர்களுக்குரியதாகவே இருந்தது.

ஆனால் அந்தப் பாத்திரத்தை அவர்கள் சரியாகக் கையாளவில்லை. இலங்கை தமிழர்கள் அவர்களது அரசியல் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையில் ஒரு இக்கட்டான நிலையில் இருக்கிறார்கள்.

சர்வதேச சமூகத்தின் தலையீடுகளினால் கூட இலங்கை அரசாங்கத்தை வழிக்கு கொண்டுவர முடியவில்லை. தமிழ் அரசியல்வாதிகளும் சில அவதானிகளும் புவிசார் அரசியல் நிலைவரங்கள் தமிழர்களுக்கு வாய்ப்பாக அமையும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தபோதிலும் நிலைமை தலைகீழாகவே மாறியது.

1987 ஜூலை சமாதான உடன்படிக்கையின் மூலமாக மாகாணசபைகள் அறிமுகம் செய்யப்படுவதற்கு உதவிய இந்தியாவினால் கூட அந்த நோக்கத் துக்காக 36 வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை இலங்கை அரசாங்கங்கள் நடைமுறைப்படுத்து வதை இன்றுவரை உறுதிசெய்யமுடிய வில்லை.

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கான சாத்தியங்களைக் காணவில்லை. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தையே நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

தென்னிலங்கை சிங்கள அரசியல் சமுதாயத்தை பொறுத்தவரை இனப் பிரச்சினைக்கு சிறுபான்மை இனத்தவர்களின் நியாயபூர்வமான குறைந்தபட்ச அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு அரசியல் தீர்வைக் கூட காணவேண்டிய தேவை இருப்பதாக கருதுவதாக இல்லை.

தீர்வைக் காண்பதற்கு தென்னிலங்கையை நிர்ப்பந்திக்கக்கூடிய நெருக்குதலைக் கொடுப்பதற்கான வழிமுறை எதுவும் தமிழ் அரசியல் கட்சிகளிடம் இல்லை. இவர்களை நம்பி போராட்டங்களில் இறங்குவதற்கும் தமிழ் மக்கள் தயாரில்லை. பல தமிழ்த் தலைவர்கள் கடந்த காலத்தில் தமிழர்களை வாழவைப்பதிலேயே நாட்டம் காட்டுகிறார்கள். அவர்கள் ஆயுதமேந்தப் போவதில்லை என்றபோதிலும் கடந்த கால ஆயுதப்போராட்டம் குறித்து பேசிக்கொண்டேயிருக்கிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழ்ச்சமூகத்தில் உள்ள தீவிரவாத நிலைப்பாடுகளைக் கொண்ட குழுக்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஒத்துழைப்பவர்களாகவே பல தமிழ் தலைவர்கள் நடந்துகொள்கிறார்கள். வெளிநாடுகளினாலும் கையாளப்படக்கூடியவர்களாக அவர்கள் இருப்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

நடைமுறை யதார்த்தங்களை உணராதவர்களாக தமிழ்த்தேசிய அரசியலை வெறுமனே உணர்ச்சிமயமான கற்பிதங்களுடன் பேசிக்கொண்டிருக்கும் அவர்கள் கடந்தகால போராட்டங்களை காவியம் போன்று புகழ்பாடுவதில் திருப்தி காண்கிறார்கள்.

இவற்றை விடுத்து கடந்தகால கசப்பான அனுபவங்களில் இருந்து பெறக்கூடியதாக இருக்கும் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைச் சாத்தியமான பாதையை வகுக்கக்கூடிய ஆற்றல்களை இதுவரையில் வெளிப்படுத்த முடியாதவர்களாக தமிழ் அரசியல்வாதிகள் விளங்குகிறார்கள். ஒரு கட்சியின் நிலைப்பாட்டுக்கு மற்றைய கட்சி எதிர்வினையைக் காட்டுவதிலேயே காலம் கடந்துகொண்டிருக்கிறது.

இவை தமிழரசு கட்சியின் புதிய தலைவர் சிந்தித்துப் பார்க்கவேண்டிய முக்கியமான விடயங்கள். பழைய தமிழரசின் அரசியலுக்கு புதிய தலைவர் தேவையில்லை.

இறுதியாக தமிழரசு கட்சியின் தலைவர் தேர்தலில் யார் வெற்றிபெற வேண்டும் என்பதில் ஏனைய தமிழ்க் கட்சிகள் உன்னிப்பான அக்கறையுடன் இருப்பது சுவாரஸ்யமான ஓர் அம்சமாகும்.

●

# தாழ்வு மனப்பான்மை அற்றவர்களாக உங்கள் குழந்தைகளை வளர்ப்பது எப்படி?

எஸ்.ஜெ.ஆதி

பெரும்பாலான குழந்தைகளுக்கும் தாழ்வு மனப்பான்மை பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இதனால் பெரிய நட்சத்திரமாக வர வேண்டிய குழந்தைகளும், தாழ்வு மனப்பான்மை காரணங்களால் தன்னைத்தானே சுருக்கிக் கொள்கிறார்கள்.

“ஆசிரியர்களாகவும் பெற்றோர்களாகவும் இருக்க வேண்டிய நாமே நம் குழந்தைகள் மனதில் தாழ்வுமனப்பான்மை ஏற்பட முக்கிய காரணமாகிவிடுகிறோம்.

நிறத்தில் ஆரம்பித்து படிப்பு வரை என்றாவது ஒரே ஒரு நாள் கூட, தன் குழந்தையை குறை கூறாத பெற்றோர்கள் இங்கு குறைவே.

சமநிலை ஆளுமையோடு பிறக்கக் கூடிய ஒவ்வொரு குழந்தைகளும், தன்னுடைய பெற்றோரே தன்னை குத்தி காட்டும்போது மனம் உடைந்து போகிறார்கள். அதன் விளைவு, தன்னைவிட பலம் பொருந்திய நபர்களிடமும், இடங்களிலும் இருந்து ஒதுங்கியோ அல்லது பழகுவதிலும் அணுகுவதிலும் தயக்கத்துடனே இருப்பார்கள்.

இதுபோன்ற எண்ணத்தை ஒரு போதும் பெற்றோர்கள் குழந்தைகள் மனதில் ஏற்படுத்திவிடக்கூடாது. என் மகன் சரியாவே படிக்கிறான் இல்லை, எந்த ஒரு விடயத்திலேயும் தன்னுடைய திறமையை வெளிப்படுத்துகிறானில்லை என்பதுதான் இன்றைக்கு பல பெற்றோர்களின் குற்றச்சாட்டும், புலம்பலும்.

இதற்குக் குழந்தைகளிடம் இருக்கும் தாழ்வு மனப்பான்மைதான் பிரதான காரணமா இருக்கும்.

“நீ ஏன் உன் அண்ணன், அக்கா, தம்பி, தங்கை மாதிரி இல்ல. அவங்களுக்குச் செய்வதைப் போலத்தானே உனக்கு செய்றேன்” என்று பல பெற்றோர்கள் சொல்வதே விநோதம்தான்.

ஒரே வயிற்றில் பிறந்தாலும் நாம் ஒரே மாதிரியான எண்ணத்துடனாகவா வளர்ந்தோம்? நமக்கு தனித்தனி எண்ணங்கள், குணங்கள் இருக்கின்றன அல்லவா? அதே போன்ற எண்ணமும் நம் பிள்ளைகளிடம் இருக்கதானே செய்யும்.

“நீ படிக்கலைனா உன்னை ஒருத்தரும் மதிக்க மாட்டாங்கள், வாழ்க்கையில சரியா கஷ்டப்பட போற இந்த உலகமே உன்னை பார்த்து சிரிக்கப் போகுது” என்பது போன்ற வார்த்தைகளை ஒரு போதும் குழந்தைகளிடம் உதிர்க்காதீர்கள். அவை படிப்படியாக குழந்தைகளின் மனதில் பதிந்து, அழுத்தத்தை உண்டாக்கி “படிக்காவிட்டாலே, படிப்பில் புள்ளிகள் குறைந்தாலே உலகம் தன்னை கண்டுசிரிக்க ஆரம்பித்துவிடும் என்று தன்னை தன்னைத் தானே ஒதுக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

அதுமட்டுமல்லாது அந்தப் பதட்டத்தினால் பயத்தினால் அழுத்தத்தினால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை வேறு வன்போக்கு உணர்வுகளாக வெளிப்படுத்த தொடங்கி விடுவார்கள்.

தன்னம்பிக்கையை குழந்தைகளிடம் வளர்க்க, “நீ நல்லா படி. தைரியமா வகுப்பில பேசு. உனக்கு தெரிஞ்சதை தெரியும்னு சொல்லு.. தெரியாததை தைரியமா தெரியாதுனு சொல்லு. அதனால மத்தவங்க சிரிச்சாலும் கவலைப்படாத” என்று அவர்களை தைரியப்படுத்துங்கள் அப்போதுதான் வாய் திறந்து பேசுவார்கள். எதையும் தைரியமாக பேசத் தெரிந்தாலே குழந்தைகளின் உள்ளே இருக்கும் பயம் போய்விடும். பயம் அகன்றாலே தன்னம்பிக்கை பிறக்கும்.

மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்கிற நினைப்பு குழந்தைகளிடம் இருந்தால் அவற்றை பேசி பேசி கரைத்து விடுங்கள்.

சிறு வயதிலேயே உங்கள் குழந்தைகளுக்குள் ஏற்படும் தாழ்வு மனப்பான்மையை களைய தவறுவீர்களாக இருந்தால் அவர்கள் வளர்ந்த பின்னர்

- மற்றவர்களைவிட தாங்கள் ஏதோகுறையுள்ளவர்கள் போல கருதி பெரும்பாலும் தனித்திருப்பார்கள்.
- யாரையும் நேருக்கு நேர் கண்களைப் பார்த்துப் பேச மாட்டார்கள்.
- ஏதோ ஒன்றை நினைத்து பயந்து போயிருப்பார்கள். அதே சூழ்நிலை வந்தால் நடுங்கிப்போய்விடுவார்கள்.
- பலர் முன்பு தொடர்ச்சியாகப் பேச தடுமாறுவார்கள். அவர்கள் பேச வந்த விஷயத்தை பயம் தடுத்துவிடும்.
- சின்ன சின்ன விஷயங்களைக் கூட பெரிதுபடுத்தி பேசுவார்கள்.
- மூச்சு வாங்கும், நெற்றியில் வியர்த்துக் கொட்டும், உடல்நடுங்கும். ஏதோ ஒரு சஞ்ஜலம் விழிகளில் தென்படும்.
- அமைதியற்ற நிலையில் இருப்பார்கள். ரத்த அழுத்தம் அதிகமாகும் அல்லது குறைந்துபோகும்.
- நாலு பேர் சுற்றி நின்று கேள்வி கேட்டால், இதயம் வேகமாக படபடத்து, மயங்கியும் விடுவார்கள்.
- ஏதாவது தவறு நடந்துவிட்டால் பயந்து நடுங்குவார்கள். தன்மீது ஏதாவது பழி வந்துவிடுமோ என்று எப்போதும் அஞ்சுவார்கள்.
- முக்கிய பொறுப்புகளை ஏற்கத் தயங்குவார்கள்.
- அலுவலக விவாதங்களில் பேசும் போது சுற்றி இருப்பவர்களை பார்த்து ஒருவித தடுமாற்றத்துடன் பேசுவார்கள்.
- எந்த ஒரு விஷயத்தையும் கோர்வையாக பேசத் தெரியாது. மூளை தெளிவற்ற நிலையில் எப்போதும் குழப்பத்திலேயே இருக்கும்.
- இவர்கள் எப்போதும் வேண்டாத சிந்தனைகளில் மூழ்கித் தங்களைத் தாங்களே வருத்திக் கொள்வார்கள்

- ஒருவரிடம் மறைந்திருக்கும் எல்லா திறமைகளையும் மற்றும் ஆற்றலையும் ஒருமுகப்படுத்தி உடலையும் மனதையும் வலுப்படுத்தி வெற்றிக்கு பாதை அமைக்கும் அபார சக்தி கொண்டது தன்னம்பிக்கைதான். ஆதலால் தாழ்வு மனப்பான்மை நீங்கி தன்னம்பிக்கை மிக்கவர்களாக உங்கள் குழந்தைகள் வளர கீழ வரும் நுட்பங்களை கையாளுங்கள்
- அவர்களின் திறன்களை அடையாளம் கண்டு ஊக்கப்படுத்துங்கள்.
- அத்தகையோருடன் அன்பும் பரிவும் காட்டி தயவாக பேசுங்கள்.
- கேலிப்பேச்சு மற்றும் குத்தி காட்டி பேசுதல் ஒப்பிட்டுப் பேசுதல் என்பவற்றை தவிருங்கள்.
- தட்டிக்கொடுத்து ஊக்குவியுங்கள் தடுமாறும் போது தாங்கி பிடியுங்கள்.
- எக்காரணத்தைச் செய்ய முற்படினும் அதிகளவு தடை போடாமல் அதில் உள்ள சாதக பாதகங்களை விவரித்து கூறுங்கள்.
- விருப்பத்தின் அடிப்படையில் ஈடுபாட்டுடன் செயல்படுவதற்கு அவர்களை வழிப்படுத்துங்கள்.
- தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுங்கள்.
- இவ்வாறானவர்கள் ஒதுங்கிப் பின் தங்காமல் வகுப்பு நிகழ்ச்சிகளில் முழுமையாக பங்கு கொள்ள ஊக்குவியுங்கள்.
- மேலும் இவ்வாறானவர்களிடம் காணக்கூடிய தனிநாட்டத்தினை கண்டு பிடித்து அது வளரவும் அதனால் பெருமை பெறவும் உதவுங்கள்.

●

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** இலங்கை தமிழரசு கட்சியின் தலைவரை தேர்தல் மூலமே தெரிவு செய்வது என்ற முடிவை அந்தப் பதவிக்கு போட்டியிடும் மூன்று போட்டியாளர்களும் எடுத்துள்ளனரே. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**வியுக்தியார்:** நினைப்பதற்கு என்ன இருக்கின்றது. கட்சியின் தலைவராகிவிடுவது என்று முடிவெடுத்து விட்டால், வெற்றியோ தோல்வியோ போட்டியிட்டுப்பார்த்தால்தானே தலைவராகலாம். இதில் வேடிக்கை என்னவென்றால், போட்டியிடும் ஒரு வேட்பாளரான யோகேஸ்வரன் தனது ஆதரவு சிறிதரனுக்கு (அதாவது மற்றையை வேட்பாளர்களில் ஒருவருக்கு) என்று சொல்லிவிட்டபோதிலும் போட்டியிலிருந்து விலகவில்லையாம். அதன் ‘லொஜிக்’ தான் என்ன என்பது தெரியவில்லை. சிலவேவேளை அதுவே செயலாளர் பதவிக்கான வேட்புமனுவோ தெரியவில்லையே.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** நாடளாவிய ரீதியில் நடைபெற்றுவரும் யுக்திய சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில், பிரதான கடத்தல்காரர்களை கைது செய்து உண்மையான போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளாரே. அவர் சொல்வது சரியானதுதானே?

**வியுக்தியார்:** அவர் சொல்வது நூறு வீதம் சரியானதுதான். ஆனால் இவர்களாவது போதைப்பொருள் விநியோக வலையமைப்பை முடியடிக்கப்பார்க்கிறார்கள். ஆனால் நல்லாட்சி அரசின் காலத்தில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சராக இவர்தானே பதவி வகித்தார். அதாவது பொலிஸ் துறைக்கு பொறுப்பான அமைச்சராக. அப்போது ஏன் அவர் செய்யவில்லை என்பது அவருக்கு தெரியாததா என்ன? ஆனால், போதைப்பொருள் விநியோக வலையமைப்பை நிர்மூலமாக்கிவிட்டால், பிரதான கடத்தில்காரர்கள் நாட்டுக்குள் கடத்தி வந்தாலும் அவற்றை விநியோகிக்காமல் என்ன செய்வது.?. இதுபோன்ற நடவடிக்கைகளை மேலிருந்து கீழாக ஆரம்பிப்பதை விட கீழிருந்து மேலாக ஆரம்பிப்பதுதான் பொருத்தமானது. அரசாங்கம் சரியான பாதையில்தான் செல்கின்றது என்றுதான் நினைக்கின்றேன்.

---

**எம். கௌதம், அமிர்தகழி,**
**மட்டக்களப்பு**

**கேள்வி:** எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் செயல்குழு ஏகமனதாக தீர்மானித்துள்ளதே. இதுவரை அவர் தேர்தலில் போட்டியிடப் போவதாக பகிரங்கமாக அறிவிக்காத நிலையில் இப்போது கட்சி வேட்பாளராக தெரிவுசெய்திருப்பது இனி அவரும் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குவார் என்று நம்பலாமா?

**வியுக்தியார்:** இது என்ன கேள்வி. இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டு தேர்தலுக்கு முன்னரும் ஐதேக அவரை வேட்பாளர் என்று அறிவித்தது. பின்னர் பதினைந்திலும் கட்சி அவரையே தமது வேட்பாளர் என்று அறிவித்திருந்தது. ஆனால் நடந்ததுதான் உங்களுக்குத் தெரியுமே. 2010ல் சரத் பொன்சேகா பொதுவேட்பாளராக களம் இறங்க ஆதரவு தெரிவித்தது. பின்னர் பதினைந்தில் மைத்திரியை ஆதரித்தது. இது எல்லாம் வழக்கமான ஒன்றுதான். ஆனால் இந்தத் தடவை முன்னரைப் போல இல்லாமல் அவர் நிச்சயம் களம் இறங்குவார் என்றே நினைக்கின்றேன். நீங்கள் நம்புவதுபோல விரைவில் பிரச்சாரம் தொடங்குகின்றதா என்று பொறுத்திருந்து பார்ப்போமே.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** நிதி தாக்கம் குறித்த முறையான, அறிவியல் பூர்வமான கணக்கெடுப்புகள் ஏதுமின்றியே தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் வற்வரியை 18 வீதமாக அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளாரே. அவர் சொல்வது போலத்தான் அறிவியல் பூர்வமாக சிந்திக்காமல் அரசாங்கம் வற்வரியை அதிகரித்திருக்கிறது என்று நிங்களும் நம்புகின்றீர்களா?

**வியுக்தியார்:** சஜித் பிரேமதாச, லண்டனில் பிரபலமான ஸ்கூல் எவ் எக்கொனமிக்ஸ் என்ற பல்கலைக்கழகத்தில் படித்தவர். அதற்காக அவர் இங்கு ஏஎல் எல்லாம் சிறப்பாக சித்தியடைந்தாரா என்பது தெரியவில்லை. அந்த பல்கலைக்கழகத்தில் நாட்டு தலைவர்களின் பிள்ளைகள் படிப்பதற்காக ஒதுக்கப்படும் இடத்தின் ஊடாக அனுமதி பெற்று பட்டம் பெற்றவர். அவர் சொல்வது சரியாகத்தான் இருக்கும். ஆனால், வற்வரி இப்போ 3 வீதத்தால்தான் அதிகரிக்கப்பட்டது. அதாவது நூறு ரூபா பொருளுக்கு இப்போதைய வரி அதிகரிப்பால் கூடியிருப்பது 3 ரூபாதான். ஆனால் இப்போது பிரச்சினையே முன்னர் வற் வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்த எரிபொருள், மின்சாரம் என்பன உட்பட பலவற்றிற்கு வற்வரி சேர்க்கப்பட்டிருக்கின்றது. அதுதான் பிரச்சினையே. அரசாங்கம் அறிவியல் பூர்வமாக சிந்திக்கவில்லை என்பவரும் கொஞ்சம் சிந்தித்திருக்கவேண்டுமோ தெரியவில்லையே.

# நியூசிலாந்து நாடாளுமன்றில் மாவோரி பழங்குடி பெண் எம்பியின் உரிமைக் குரல்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

நியூசிலாந்தின் 170 ஆண்டு வரலாற்றில் முதன் முறையாக நாடாளுமன்றையே அதிர வைத்த இளம் பெண் எம்பி தான் மைபி கிளாக். தங்களின் பாரம் பரிய வெற்றி முழகத்தை முழங்கிவிட்டு இவ்வருட ஜனவரி ஆரம்பத்தில் உரையாற்றினார். அதனை அங்கிருந்து எம்பிக்கள் மகிழ்ச்சியுடனும், ஆச்சர்யத்துடன் கேட்டுக் கொண்டே இருந்தனர். அந்த முழக்கம் உலகம் முழுவதும் பெரிய அளவில் வைரலாகி, காண்போரை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

கடந்த சில நாட்களாகவே நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் இளம்பெண் ஒருவர் முழக்கமிட்ட வீடியோ தான் இணையத்தில் பரவலாக பரவி வருகிறது. மைபி கிளார்க் (Hana-Rawhiti Maipi-Clarke) என்ற அந்த 21 வயது பழங்குடியின மாவோரி நியூசிலாந்து பெண் நாடாளுமன்றத்திற்கு முதல்முறையாகத் தேர்வு செய்யப்பட்டு இருந்தார்.

நாடாளுமன்றில் அவர் நியூசிலாந்து மாவோரி பழங்குடியின மக்களின் பாரம் பரிய ஹக்கா அதாவது (war cry) என்ற ஒன்றைச் செய்து காட்டினர். இந்த வீடியோவைம் இணையத்தில் பரவலானது.



நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் ஜனவரி முதல் வாரத்தில், மாவோரி இனத்தைச் சேர்ந்த 21 வயது பெண் உறுப்பினர் முழக்கமிட்ட வீடியோ பரவி வைரலாகிய நிலையில், இந்த மாவோரி இன மக்கள் யார்? அவர்கள் வரலாறு என்ன என்பது குறித்து தற்போது உலகம் உற்று நோக்கியுள்ளது

### மாவோரிக்கள் யார்?

நியூசிலாந்து நாட்டை பொறுத்தவரை அங்கே ஆங்கிலேயர்கள் தான் அதிகம் என்றாலும் இன்னும் கூட மாவோரி பழங்குடியினர் கணிசமாக வசிக்கிறார்கள்.

நியூசிலாந்தில் வசிக்கும் பழங்குடியின மக்கள் தான் இந்த மாவோரிகள். இவர்களுக்கு எனத் தனியாக மொழி, கலாச்சாரம், மரபுகள், பழக்க வழக்கங்கள் உள்ளன. அவர்கள் சுமார் 13 ஆம் நூற் றாண்டில், கிழக்கு பாலினேசியாவிலிருந்து படகுகள் மூலம் நியூசிலாந்திற்கு வந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அன்று அவர்கள் பின்பற்றிய கலாச்சாரம், மரபுகளை இன்றளவும் பின்பற்றிப் பாதுகாத்து வருகிறார்கள்.

மாவோரி அடையாளத்தின் மையக் கருத்தே வக்கபாபா என்பதாகும். இது ஒவ்வொரு தனி நபர்களையும் அவர்களின் முன்னோர்கள், நிலம் மற்றும் சமூகத்துடன் இணைக்கிறது.

### பிரிட்டிஷ் - மாவோரி போர்

இந்த மாவோரி இன மக்களுக்கு நெசவு செய்வது மற்றும் பச்சை குத்துதல் ஆகியவை முக்கிய வேலைகளாகும். தற்போதும் அவர்களின் கலைப் படைப்புகளுக்கு மிகப் பெரிய வரவேற்பும் இருக்கிறது. அதில் புராணங்கள், தொன்மங்கள் மற்றும் பரம்பரை வரலாறு இடம் பெற்றிருக்கும்.

ஒரு காலத்தில் நியூசிலாந்து முழுக்க இந்த மவோரி இன மக்கள் பரவி இருந்தனர். ஆனால் பிரிட்டிஷ் படையெடுத்த நிலையில், அவர்கள் இருக்கும் நிலப் பரப்பு சுருங்கிவிட்டது.

நியூசிலாந்தில் மாவோரிகளுடன் பிரிட்டிஷ் இடையே பல போர்கள் நடைபெற்றது. 1840களில் தொடங்கிய இந்த போர், 1870கள் வரை நடைபெற் றது. பிரிட்டிஷ் படைக்கு நவீன ஆயுதங்கள் மற்றும் ராணுவஉத்திகளைக் கொண்டிருந்தனர்.

அதேநேரம் மாவோரிக்களும் கொரில்லாப் போர் முறையில் கைதேர்ந்தவர்களாகவே இருந்தனர். அவர்கள் தங்கள் நிலங்களைப் பாதுகாக்க ஆங்கிலேயர்களுடன் துணிச்சலாகப் போரிட்டனர்.

### மாவோரிக்கள் வீழ்த்தப்பட்ட கதை

இருப்பினும், பிரிட்டிஷ் படையினர் பீரங்கிகள், போர்க்கப்பல்களை மவோரி இன வீரர்கள் சமாளிக்க முடியவில்லை. வடக்குப் போர், தாரனக்கிப் போர்கள், வைகாடோ போர் எனப் பல போர்கள் நடந்த நிலையில், ஒவ்வொன்றிலும் மவோரி மக்கள் தங்கள் நிலத்தையும் உரிமைகளையும் கொஞ்சம் இழந்து வந்தனர்.

இதில் முக்கியமானது 1863இல் நடந்த வைகாடோ (Waikato Invasion) படையெடுப்பு. இதில் பிரிட்டிஷ் படை நடத்திய மூர்க்கத்தனமான தாக்குதலில் பல மாவோரி குழுக்கள் தங்கள் நிலம் மற்றும் செல்வாக்கை இழந்தனர்.

பிரிட்டிஷ் படைகள் மாவோரிகளின் கிராமங்களை அழித்து நிலங்களை அபகரித்து, செல்வங்களைக் கொள்ளையடித்தனர். இந்த போர்கள் பல மாவோரி பழங்குடியினரின் தோல்விக்கு வழி வகுத்தது.

### சொந்த மண்ணில் சிறுபான்மையினரான மாவோரி

இப்போரினால் குறிப்பிடத்தக்க உயிரிழப்புகள், நில அபகரிப்பு ஆகியவற்றுக்கு காரணமாக இருந்தது. தங்கள் சொந்த நாட்டிலேயே மாவோரி இன மக்கள் சிறுபான்மையினராக ஆக்கப்பட்டனர். அப்போது ஏற்பட்ட கலாச்சார, சமூக மற்றும் பொருளாதார பாதிப்பு தலைமுறை தலைமுறையாகவே நீடிக்கிறது.



ஆனால், சமீப காலங்களாக மாவோரி மொழி கலாச்சாரத்தை மீட்டெடுக்கும் முயற்சி தீவிரமடைந்துள்ளது. மாவோரி இன சிறப்புகள், வரலாறு ஆகியவற்றைப் பரப்ப பல்வேறு நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேயரால் வீழ்த்தப்பட்ட 800 ஆண்டு பழமையான இனமே மாவோரிகள் ஆவார்.

### 170 ஆண்டு வரலாற்றில் முதன் முறை!

நியூசிலாந்தின் 170 ஆண்டு வரலாற்றில் முதன் முறையாக நாடாளுமன்றையே அதிர வைத்த இளம் பெண் எம்பி தான் மைபி கிளாக். தங்களின் பாரம் பரிய வெற்றி முழகத்தை முழங்கிவிட்டு இவ்வருட ஜனவரி ஆரம்பத்தில் உரையாற்றினார். அதனை அங்கிருந்து எம்பிக்கள் மகிழ்ச்சியுடனும், ஆச்சரயத்துடன் கேட்டுக் கொண்டே இருந்தனர். அந்த முழக்கம் உலகம் முழுவதும் பெரிய அளவில் வைரலாகி, காண்போரை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

நியூசிலாந்து உலகின் அற்புதமான நாடுகளில் ஒன்று. ஊழல்கள் இல்லாத, நாட்டையும், நாட்டு மக்களையும் வெகுவாக நேசிக்கும் அரசியல்வாதிகள் நிறைந்த நாடு. அவுஸ்திரேலியா அருகே உள்ளது நியூசிலாந்து உலகின் அபிவிருத்தியான நாடுகளில் ஒன்றாகும்.

நியூசிலாந்து நாட்டின் 170 ஆண்டு கால நாடாளுமன்ற வரலாற்றில் முதல் முறையாக கடந்த அக்டோபரில் 21 வயது இளம் பெண் எம்பி தேர்வு செய்யப்பட்டார். மைபி கிளார்க் என்ற அந்த பெண் எம்பி தான் நியூசிலாந்து நாட்டிலேயே 21 வயதில் எம்பியானவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

நியூசிலாந்து நாட்டின் மாவோரி பழங்குடி பெண் எம்பியான மைபி கிளார்க் நாடாளுமன்றத்தில் முழக்கமிட்ட வீடியோ காண்போரை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

நியூசிலாந்தை பொறுத்தவரை ஹக்கா நடனம், நியூசிலாந்து மாவோரி பழங்குடியினரின் ஆதி பழக்கங்களில் ஒன்றாகும். போர், வெற்றி, ஒற்றுமை, இன குழுவின் பெருமை என எல்லாவற்றையும் சொல்ல பயன்படுத்தபடும் முறையாகும். அந்த பழங்குடியினரில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 21 வயது எம்பியான மைபி கிளாக் வெற்றி முழக்கமிட்டு, தனது உரையை பேசி, அந்த நாடாளுமன்றத்தையே அதிர வைத்துள்ளார்.

இந்த மைபி கிளாக் எம்பி திடீர் அரசியல்வாதி அல்ல. அரசியல் அவரது ரத்தத்திலேயே ஊறி உள்ளது. அவரது தாத்தா வயர்முகட்டேனே நியூசிலாந்தின் மாவோரி பகுதியின் முதல்வராக இருந்தார். அவரது அத்தை ஹனா தே ஹேமாரா நியூசிலாந்து நாடாளுமன்றத்தில் முக்கிய பொறுப்பில் இருந்தவர். ஹாமில்டனின் நடந்த அடிமைத்தனம் மற்றும் மாவோரி பழங்குடியினர் மீது நடந்த அடக்குமுறைகளுக்கு எதிராக போராடியவர்கள் ஆவார்.

மைபி-கிளார்க் தன்னை ஓர் அரசியல் வாதியாக நினைக்கவில்லை. மாறாக மாவோரி மொழி, நிலம் மற்றும் பாரம் பரிய அறிவு ஆகியவற்றை பாதுகாக்கும் பாதுகாவலனாக நினைத்து செயல்பட்டு வருகிறார். அதுமட்டுமின்றி அடக்குமுறைகளை சந்தித்த இனமான மவோரிகளிடம் இருந்து வந்துள்ள இவர், மாவோரியின் குரல்களைக் கேட்க வேண்டிய நேரம் இது என்று உறுதியாக நம்புகிறார்.

தற்போது உலகம் பூராக மைபி - கிளார்க்கை இன்ஸ்டாகிராமில் 20,000 பின்தொடர்பவர்களும், டிக்டோக்கில் 18,500 பின்தொடர்பவர்களும் இருக்கிறார்கள். மைபி - கிளார்க் சமூக ஊடகங்களில் மிகவும் முன்னணியில் இருக்கிறார். நியூசிலாந்தின் 21 வயது எம்பியான மைபி-கிளார்க் குரல் இப்போது உலகெங்கும் சமூக ஊடகங்களில் ஓங்கி ஒலிக்கிறது.



# யாழ்.மாவட்டத்தில் உரியவாறு அகற்றப்படாத மலக்கழிவுகள்

## வடக்கு ஆளுநரிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மலக்கழிவுகள் உரிய முறையில் அப்புறப்படுத்தப்படாமையினால் மக்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு முகங்கொடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

மலக்கழிவகற்றும் வாகனங்களை கண்காணிப்பதற்கு ஜீ.பி.எஸ் தொழில்நுட்பத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில், தனியார் நிறுவனங்களின் மூலம் மலக்கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த வாகனங்களில் நிரப்பிச் செல்லப்படுகிற மலக்கழிவுகளை உரியமுறையில் அப்புறப்படுத்தாமல், சில பகுதிகளில் மக்களின் குடியிருப்புகளுக்கு அண்மையில் கொட்டப்படுவதாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஆளுநர் அதற்கான தீர்வுகளையும் முன்வைத்தார்.

இதன்படி, மலக்கழிவகற்றும் வாகனங்கள் பதிவுசெய்யப்பட வேண்டும் எனவும், அவை போக்குவரத்து காவல்துறையினரால் அவதானிக்கப்பட வேண்டும் எனவும், அவர்களுக்கான ஒழுங்கு விதிகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் வழங்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

(அ)



# வடமராட்சி கிழக்கில் ஒதுங்கும் மர்மப் பொருட்களால் பரபரப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 14

வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியில் நேற்று சனிக்கிழமையும் ஒரு மர்ம பொருள் கரை ஒதுங்கியுள்ளது.

அண்மைக் காலமாக வடமராட்சி கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் பல பொருட்கள் கரை ஒதுங்கிவருகின்றன.

குறிப்பாக, வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வீசுகின்ற காற்று காலப்பகுதியில் அதிகளவான பொருட்கள் கரை ஒதுங்குவது வழமையாக இருக்கின்ற போதும் இம்முறை அதிகளவான பொருட்கள் கரையொதுங்கியுள்ளன.

புத்த பெருமான் அமர்ந்திருக்கக் கூடிய தேர் மிதப்புகள், உட்பட பல்வேறு பொருட்கள் அண்மை காலமாக கரையொதுங்கியுள்ளன. (அ-02)

# மண்ணுக்குள் புதைந்த ஐந்து லயன் அறைகள்!

## 21 குடும்பங்கள் வெளியேற்றம்

கொழும்பு, ஜன. 14

படல்கும்புர பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வரதொலவத்த பகுதியில் ஏற்பட்ட மண்சரிவால் 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேர் அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மொனறாகலை மாவட்டத்துக்கான பிரதி பணிப்பாளர் நாயகம் ஏ.எச். ரவீந்திர குமார தெரிவித்தார்.

குறித்த பகுதியில் கடந்த 12 ஆம் திகதி முதல் சிறு அளவில் மண்சரிவுநிலை காணப்பட்டதாகவும், நேற்று பாரியளவு மண்சரிவு ஏற்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இப்பகுதியில் இருந்த 5 வீடுகளைக்கொண்ட லயன் குடியிருப்பொன்று முழுமையாக மண்ணுக்குள் புதையுண்டுள்ளது. மேலும் 16 வீடுகள் மண்சரிவு அபாயத்தை எதிர் கொண்டுள்ளன.

குறித்த பகுதியில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தற்போது உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்காக வரதொல சிங்கள பாடசாலையில் பாதுகாப்பு மத்திய நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது.

இக்குடும்பங்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பிரதி பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார்.

(அ)

# மத்திய ஆபிரிக்காவில் இலங்கை விமானப்படையின் ஹெலி விபத்து

கொழும்பு, ஜன. 14

மத்திய ஆபிரிக்காவில் அமைதி காக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த இலங்கை விமானப் படை வீரர்கள் பயணித்த ஹெலி கொப்டர் விபத்திற்குள்ளாகியுள்ளது.

எம்.ஐ. 17 வகையை சேர்ந்த குறித்த விமானம் அந்நாட்டு நேரப்படி நேற்று முன் தினம் காலை 9.30 மணிக்கு விபத்திற்குள்ளாகியுள்ளது.

எனினும், விமானப்படை வீரர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக விமானம் விபத்திற்குள்ளாகியதாக இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் விமானப்படைத் தளபதியின் ஆலோசனைக்கு அமைவாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(அ)

# தமிழகத்தில் விபத்தில் இலங்கையர்கள் காயம்

சென்னை, ஜன. 14

சபரிமலை ஐயப்பன் கோவிலுக்கு செல்லும் வழியில் இடம்பெற்ற வாகன விபத்தில் காயமடைந்தவர்கள் பொகவந்தலாவை பகுதியைச் சேர்ந்தவர்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், அவர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு சென்னையில் உள்ள இலங்கை துணை தூதுவரிடம், அமைச்சர் ஜீவன் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

விபத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஐயப்ப பக்தர்களின் உறவினர்கள், விபத்து தொடர்பில் நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ரவி குழந்தைவேலின் கவனத்துக்கு கொண்டுவந்துள்ளனர். தமது உறவுகளுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்துகொடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து அமைச்சரை தொடர்புகொண்ட ரவி குழந்தைவேலு, நிலைமை குறித்து எடுத்துரைத்துள்ளார். அதன் பின்னர் சென்னையில் உள்ள தூதுவரை தொடர்புகொண்டு, பாதிக்கப்பட்டுள்ள பக்தர்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு கோரியுள்ளார்.

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு செல்ல இலங்கையில் இருந்து சென்னை சென்ற பொகவந்தலாவை சேர்ந்த 14 பேர் அங்கிருந்து வானொன்றில் புறப்பட்டுள்ளனர். சாரதியுடன் சேர்த்து மொத்தம் 15 பேர்.

வெள்ளிக்கிழமை அதிகாலை சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா விஜயகோபாலபுரம் என்ற இடத்தில் சென்றபோது வான் திடீரென பிரேக்டவுன் ஆனது.

இதைடுத்து சாலையோரம் வானை நிறுத்தி சாரதி பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது பின்னால் வந்த மற்றொரு வான் சாரதியும் வண்டியை நிறுத்திவிட்டு வந்து சென்னை வான் சாரதிக்கு உதவி செய்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் சென்னையில் இருந்து கம்பத்தை நோக்கி வந்த தனியார் பஸ் முன்னால் நின்ற சென்னை வானில் பின்புறம் மோதியது. இதில் வானில் இருந்த பொகவந்தலாவையை சேர்ந்த 14 பேரும் காயம் அடைந்துள்ளனர்.

உடனடியாக அம்புலன்ஸ் மூலம் பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து பாடாலூர் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# அரசியலாகும் மதம்?....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக விவாதங்களில் பேசுபொருளாகி வருகிறது. "2032-க்குள் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாகவும் அதற்குப் பிறகு சீனாவையும் அமெரிக்காவையும் முந்தி, இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலகின் மிகப் பெரிய பொருளாதார வல்லரசாகவும் இந்தியா உருவெடுக்கும்" என்று இங்கிலாந்தைச் சேர்ந்த பொருளாதார மற்றும் வர்த்தக ஆய்வு மையம் (Centre for Economic and Business Research – CEBR) கடந்த டிசம்பர் 27 அன்று தனது அறிக்கையில் கணித்துள்ளது. நிலவில் கால் பதித்ததும், சர்வதேச உறவுகளில் சுதந்தரமான நிலைப்பாடும் மோடியின் பிம்பத்தைப் பெருமளவில் உயர்த்தியிருக்கின்றன் இந்த தேசியப் பெருமை மற்றும் பொதுமக்கள் நல்லெண்ணம் ஆகியவற்றுடன் இந்துக்களின் உள்ளங்களில் இராமர் கோவில் திறப்பு மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் போர் தொடங்கும் முன்னரே தோல்வியை ஒப்புக்கொள்ள விரும்பாத

ராகுலின் காங்கிரஸ் கட்சி, காந்தி குடும்ப இளவரசருக்கு நாடு தழுவிய ஒரு யாத்திரையை ஏற்பாடு செய்துள்ளது.

'பாரத் ஜோடோ நியாய யாத்திரை' என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது (செப்ரெம்பர் 2022 முதல் ஜனவரி 2023 வரை கன்னியாகுமரி முதல் காஷ்மீர், சிறிநகர்வரை அவர் மேற்கொண்ட பாரத் ஜோடோ யாத்திரை உங்களுக்கு நினைவிருக்கலாம்). கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய யாத்திரை, மணிப்பூரில் ஜனவரி 14 தொடங்கி மும்பையில் மார்ச் 20 அன்று நிறைவடைகிறது. 66 நாட்கள் தொடரும் இந்த யாத்திரையில் 15 மாநிலங்களின் 110 மாவட்டங்களுக்குப் பயணம் செய்து, 100 நாடாளுமன்றத் தொகு திகளைக் குறிவைக்கிறது அக் கட்சி. கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பாஜகவிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்ற, ராகு லின் கன்னியாகுமரி-சிறிநகர் யாத்திரை உதவியதாக காங்கிரஸ் தலைவர்கள் மார்தட்டிக் கொள்கிறார்கள். எனினும், தேசிய அரசியலில் மட்டுமல்லாமல் சர்வதேச அரங்கிலும் வலுவானதொரு தலைவராகத் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட மோடியின் பிம்பத்துடன், பிரதமர் வேட்பாளராகப் போட்டி போடும் அளவுக்கு ராகுல் காந்தி மட்டுமல்ல, எதிரணியின் எந்தத் தலைவரும் இல்லை என்னும் நிலை உருவாகிவிட்டது.

ஜனவரி 22 நடக்கவிருக்கும் மிக முக்கிய நிகழ்வைக் கொண்டாட்டமாக எடுத்துச் செல்ல (அனைத்து இந்தியர்களும் அந்த நாளில் வீடுகளில் விளக்குகள் ஏற்றி, தீபாவளிபோலக் கொண்டாட அழைப்பு விடுத்திருக்கிறார் மோடி) பாஜக, ஆர் எஸ் எஸ், விஷ்வ இந்து பரிஷத் மற்றும் இதர இந்து அமைப்புகளைக் கொண்ட காவிப் படை முழு மூச்சுடன் களமிறங்கியுள்ளது. இவையனைத்துக்கும் எதிர்வினையாக, காங்கிரஸ் செய்யக்கூடிய ஒரே விஷயம், ராகுலின் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய யாத்திரையாகத்தான் இருக்கும். இந்த அரசியல் அனல் வீச்சிற்கு மத்தியில், தூய காற்றைச் சுவாசிக்க, மக்கள் தவிக்கும் நிலையில், ஊடகங்களுக்கு இது ஒரு கோலாகலமான காலமாக இருக்கும். நாம் பல ஞாயிறு காலைப் பொழுதுகளில் இணைந்து பயணித்திருக்கிறோம். இப்போது நான் உங்களிடமிருந்து விடை பெறும் நேரம். கடவுள் என்றும் உங்களோடு துணை நிற்பார். வணக்கம்.

# 42,248 சந்தேகநபர்களின் பெயர்ப்பட்டியல் வெளியீடு

## உடன் கைது செய்யுமாறு பொலிஸ் மா அதிபர் உத்தரவு



கொழும்பு, ஜன. 14

நாடளாவிய ரீதியில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42,248 சந்தேக நபர்களின் பட்டியலை அனைத்து பொலிஸ் நிலையங்களின் குற்றங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளிடம், பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் கையளித்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நீதி நடவடிக்கையின் கீழ் அவர்களை கைது செய்யுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அந்த சந்தேக நபர்களில், 35,505 பேருக்கு பிடியாணைகளும், இதுவரை கைது செய்யப்படாத 4,258 சந்தேக நபர்களும், 807 (2022 இல்) மற்றும் 1,678 (2023 இல்) இடம்பெற்ற குற்றங்களுக்காக தேடப்படும் சந்தேக நபர்களும் பிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இன்று முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும் நீதி நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அறிவித்துள்ளார்.

இந்தப் பட்டியலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அடுத்த ஒரு மாத காலத்திற்குள் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த அனைத்து குற்றப்பிரிவு அதிகாரிகளையும் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் பதில் பொலிஸ் மா உத்தரவிட்டுள்ளார். (அ)

# 87,900 வருமான வரி விண்ணப்பங்கள் ஏற்பு

கொழும்பு, ஜன. 14

வருமான வரிப் பதிவுக்காக 87,900 விண்ணப்பங்கள் எமக்கு இந்த வாரம் கிடைத்துள்ளதாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் ஜெனரல் செபாலிகா சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

40,213 விண்ணப்பங்களின் பதிவுகள் நிறைவடைந்துள்ளது. திணைக்களத்தின் தொழில்நுட்ப வசதிகளுக்கு ஏற்ப மேலதிக பணிகள் மேற்கொள்ளப்படும்.

பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் ரின் எண்ணை கட்டாயம் பெற வேண்டும் என்பது சரியானது அல்ல.18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வருமான வரிக்காக பதிவு செய்து கொள்ள வேண்டும். ஆனால், அதற்கு குறைந்த கால அவகாசம் வழங்கப்பட உள்ளது. அதனை பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது வழக்குத் தொடர விரும்பவில்லை-என்றார்.



# யோக்கட் விலை உயர்வு

கொழும்பு, ஜன. 14

யோக்கட் மற்றும் பால் பைக்கெற்றுக்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

வற் வரி காரணமாகவே இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இதனால் யோக்கட் விலை 10 ரூபாய் அதிகரித்து 70 ரூபாய்க்கு விற்கப்பட்ட யோகட் 80 ரூபாயாக உயர்ந்துள்ளது.

பால் பைக்கெற் ஒன்றின் விலை 40 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 200 ரூபாவாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# திருமறை கலாமன்றத்தின் பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன. 14

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா இம்முறையும் காலை மாலை நிகழ்வுகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

பொங்கல் தினமாகிய நாளை திங்கட்கிழமை காலை 5.30 மணிக்கு இல.238,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் பணியகத்தில் பொங்கல் வைபவமும் அதனைத் தொடர்ந்து காலை 7.00 மணிக்கு இல.17 ,மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைஞானசுரபி தியான இல்லத்தில் பண்பாட்டு வழிபாடும் இடம்பெறும்.

வழமையாக பொங்கல் தினத்தன்று மாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள் இம்முறை அன்றைய தினத்தில் இடம்பெறாது. அதற்குப் பதிலாக எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு இல.238, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

## ஜனாதிபதி....

காரணமாக உலகப் பொருளாதார மாநாட்டில் இலங்கை பிரதி நிதிகள் எவரும் பங்கேற்கவில்லை.

இம்முறை ஜனாதிபதியின் இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.(அ)

## பொலிஸாருக்கு....

இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், குறித்த நடவடிக்கையில் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் தவறுகள் குறித்து பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு அறிவிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கந்தக்காடு....

கைதிகள் சில வாரங்களுக்கு முன்னர் பல்வேறு காரணங்காக மோதிக் கொண்டனர்.

இந் நிலையில் நேற்று முன் தினம் பிற்பகல் 02.00 மணியளவில் உணவு பிரச்னை தொடர்பில் இரு கைதிகள் குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, சுமார் 24 கைதிகள் காயமடைந்து வெலிகந்தை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆபத்தான நிலையில் இருந்த மூவர் மேலதிக சிகிச்சைகளுக்காக பொலனறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அதேநேரம், மோதலில் ஈடுபட்ட 64 பேரை வெலிந்த பொலிஸார் கைது செய்ததுடன், மோதலின் போது தப்பியோடிய கைதிகளில் குழுவில் 10 பேர் புலஸ்திபுர பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

மேலும் தப்பியோடிய பல கைதிகளை கைது செய்வதற்கான நடவடிக்கையும் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (அ)

## கூட்டமைப்பை....

பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளும் இந்த கூட்டணியில் இணையவுள்ளதாகவும் இந்த கூட்டணியை அமைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முனைப்பு காட்டி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மலையக அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஏற்கனவே ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.

மேலும், மலையகத்தின் பலம் வாய்ந்த அரசியல் தலைவரான பழனி திகாம்பரத்தை இந்தக் கூட்டணிக்குக் கொண்டு வருவது குறித்து தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இந்த அரசியல் கூட்டணியை கட்டியெழுப்பிய பின்னர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நியமிக்கவுள்ளதாகவும், அதன் பின்னர் இந்தக் கூட்டணியின் பலமான தலைவர் ஒருவருக்கு பிரதமர் பதவி வழங்குவது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும், இந்தக் கூட்டமைப்பைக் கட்டியெழுப்புவது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் பல பலமான அரசியல் தலைவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க ஏற்கனவே இணக்கம் தெரிவித்துள்ளனர். தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பல அரசியல் தலைவர்கள் கூட்டணியில் இணைய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அரசமைப்பு....

ஜனாதிபதி இக்கடிதத்தின் மூலம் அரசமைப்பு பேரவைக்கு அறிவித்துள் ளார்.

தாம் அனுப்பிய பரிந்துரை தொடர்பில் அரசமைப்பு பேரவை தீர்மானம் எடுப்பது இன்றியமையாதது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்த தீர்மானம் எவ்வாறு எடுக்கப்பட்டது என்பதற்கான காரணங்களை தெரிவிக்கவில்லை எனவும் அரசமைப்பு சபை தெரிவித்துள்ளது.

## ஐ.நா.....

பொருள் பாவனையாளர்கள், விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்களை கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். நூற்றுக்கணக்கானவர்களை புனர்வாழ்வு முகாமிற்கு அனுப்பியுள்ளனர் என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளின் போது மக்கள் பல்வேறு மீறல்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்,அனுமதியற்ற தேடுதல்கள் கண்மூடித்தனமான கைதுகள், தடுத்துவைத்தல் மோசமாக நடத்துதல், சித்திரவதை, பொது இடங்களில் ஆடைகளை களைந்து சோதனை போன்றன இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர், பாதிக்கப்பட்டவர்களின் சட்டத்தரணிகள் தாங்கள் பொலிஸாரிடமிருந்து அச்சுறுத்தல்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் தனது யுக்திய நடவடிக்கையை மறுஆய்விற்கு உட்படுத்தவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வோல்க் கெர் டேர்க், மனித உரிமையை அடிப்படையாக கொண்ட அணுகுமுறையை பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## மின்சார...

வருகிறோம். குறைந்த வருமானம் கொண்டவர்கள் நிச்சயமாக இந்த நன்மைகளைப் பெறுவார்கள்.

கடந்த சில மாதங்களில், குறிப்பாக கடந்த நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் இலங்கையில் கணிசமான மழை பெய்து வருவதால், கட்டணக் குறைப்பினை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

கடந்த ஜனவரி 05 ஆம் திகதி மின் கட்டண திருத்த முன்மொழிவு ஏற்கனவே இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும், பெப்ரவரி முதல் வாரத்தில் மின் கட்டணங்கள் குறைக்கப்படலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

எனினும், இந்த தகவலை மறுத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அவ்வாறான முன்மொழிவுகள் எதனையும் இதுவரை பெறவில்லை என்று கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## பொதுமக்களின்....

முக்கியமானது. எனவே ஒவ்வொரு திட்டங்களினாலும் மக்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்த பின்னரே தீர்மானங்களை முன்னெடுப்பேன்.

மன்னார் பகுதியில் குறித்த காற்றாலைகள் அமைக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய நன்மைகள் மற்றும் அமைக்கவேண்டிய அவசியம் தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி தெளிவுபடுத்தியிருந்தார்.

அதன்போது மக்கள் பிரதிநிதிகள் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

ஜனாதிபதியுடனான புரிந்துணர்விற்கு பங்கம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அமைதியாக இருந்தார்களா அல்லது குறித்த திட்டத்தினை ஏற்றுக் கொண்டு அமைதியாக இருந்தார்களா என்பதை அவர்கள்தான் தெளிவுபடுத்த வேண்டும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## பாராளுமன்றிலும் உணவு நெருக்கடி!

### எம்.பிகளிடம் 1000 ரூபாவே மாதம் அறவிடப்படுகிறது

கொழும்பு, ஜன. 14

**வற் வரி காரணமாக உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பால், பாராளுமன்ற உறுப்பினர் கள் மற்றும் ஊழியர்களின் உணவு மற்றும் பானங்களின் விலையும் இரு மடங்காக உயர்ந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இதன் காரணமாக அவர்களுக்கு உணவு வழங்குவது கடும் சவாலாக மாறியுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

பாராளுமன்றத்தின் உணவு மற்றும் பானங்களுக்காக அரசாங்கம் பெரும் தொகையை செலவிடுவதாகவும், ஆனால் எம்.பிக்கள் மற்றும் ஊழியர்களிடம் மாதந்தோறும் மிகக் குறைந்த தொகையே வசூலிக்கப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுவாக பாராளுமன்ற ஊழியர் ஒருவரிடமிருந்து உணவுக்காக 1000 ரூபா போன்ற சிறிய தொகையே அறவிடப்படுவதாக கூறப்படுகிறது.

பொருளாதார சூழ்நிலையை கருத்தில் கொண்டு, பாராளுமன்றத்தில் உணவுக்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அதிக செலவை கருத்தில் கொண்டு, மேலும் கட்டுப்பாடுகள் தேவை என அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இந்த நாட்களில் சந்தையில் மரக்கறிகளின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ள நிலையில், பாராளுமன்றத்துக்கு மரக்கறிகளை வழங்குவதில் பாரிய பிரச்னை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையை கருத்திற் கொண்டு பாராளுமன்றத்தில் உணவுக்காக வழங்கப்படும் மரக்கறிகளின் அளவு இந்நாட்களில் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், அவ்வப்போது பொருட்களின் விலை உயர்வை கருத்தில் கொண்டு அதை சமாளிக்க உணவு பொருட்களை வாங்கும் முறையை பாராளுமன்ற அதிகாரிகள் மாற்றியுள்ளனர்.

எவ்வாறாயினும், அதிக செலவு ஏற்பட்ட போதிலும், அனைத்தையும் நிர்வகித்து உணவு விநியோகம் மிகவும் சிரமத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர். (அ)

## கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும் ஜப்பான்





கொழும்பு, ஜன. 14

இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பிக்க ஜப்பான் அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திடம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற் கொண்டிருந்த ஜப்பான் நிதி அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடல் நடத்தியிருந்தார்.

இதன்போதே இலங்கையில் இடைநிறுத்தப்பட்டுள்ள ஜப்பானின் திட்டங்களை மீள ஆரம்பிக்க இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மீள் அபிவி ருத்தி திட்டத்தை விரைவாக மீள ஆரம்பிப்பது குறித்தும் தகவல் - தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் - பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் இந்த சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

விரைவாக விமான நிலைய அபிவிருத்தி பணிகளை ஆரம்பிப்பது குறித்தும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அத்துடன், இலங்கையில் புகையிரப் போக்குவரத்தை விரிவாக்க ஜப்பானின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள் வதும் குறித்தும் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன. (அ)

## 1,700 வைத்தியர்கள் 900 விரிவுரையாளர்கள் கடந்த ஆண்டில் நாட்டிலிருந்து வெளியேற்றம்

கொழும்பு, ஜன. 14

பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த ஆண்டு 1,700 க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் மற்றும் 900 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையானது இலங்கையின் மருத்துவத் துறையினையும் பல்கலைக்கழங்களின் கல்வி நடவடிக்கையினையும் பெரும் நெருக்கடிக்குத் தள்ளியுள்ளது.

இலங்கையின் உயர் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், 2023 இல் சுமார் 900 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

இதனால், தற்போது விரிவுரையாளர்கள் மத்தியில் 50 சதவீத வெற்றிடம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 155,000 பல்கலைக்கழக மாணவர் தொகையினை கருத்தில் கொண்டு, இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு உகந்த முறையில் இயங்குவதற்கு சுமார் 13,000 விரிவுரையாளர்கள் தேவைப்படுகின்றனர்.

எனினும், தற்போது 6,500 விரிவுரையாளர்கள் மாத்திரமே பல்கலைக்கழகங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளமையினால், உயர் கல்வித் துறையானது பெரும் நெருக்கடியினை சந்தித்துள்ளது.

1948 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் ஆழமான மந்த நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் பல காரணிகள் இந்த வெளியேற்றத்திற்கு பங்களிப்பு செய்கின்றன. (அ)

## அரச நிறுவனங்கள் வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு அனுமதி

கொழும்பு, ஜன. 14

பல அரச நிறுவனங்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக குறைந்த எண்ணிக்கையிலான வாகனங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளன.

இந்த முறையைப் பயன்படுத்தி பொது தேவைகளுக்காக வாகனங்களை இறக்குமதி செய்ய முடியாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்படி, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்கு வாகனம், சுகாதார அமைச்சுக்கு 21 வண்டிகள், கல்வி அமைச்சுக்கு இரண்டு பேருந்துகள் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் வெளிநாட்டு உதவியின் அடிப்படையிலேயே இந்த நாட்டுக்கு கொண்டுவரப்படவுள்ளத இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இது தொடர்பான அரசிதழ் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## வஸ்கடுவ ஹோட்டலில் தங்கியிருந்த போலாந்து தம்பதியின் பணம் கொள்ளை

கொழும்பு, ஜன. 14

போலாந்து தம்பதி தங்கியிருந்த வஸ்கடுவ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா ஹோட்டலில் அறையில் வைக்கப்பட்டிருந்த 100 அமெரிக்க டொலர், 32 ஆயிரத்து 250 இலங்கை ரூபா என்பன திருடப்பட்டுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏவா மோனிகா மெஜேவிஸ்கா என்ற 47 வயதான போலாந்து பெண் செய்துள்ள முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் சுற்றுலா விசாவில் நேற்று இலங்கை வந்துள்ளனர். சம்பவம் தொடர்பாக சுற்றுலா ஹோட்டலில் ஊழியர்களிடம் பொலிஸார் விசாரணைகளை நடத்தியுள்ளனர். (அ)

## மொட்டுக் கட்சியினரை தமது அணியில் இணைப்பதை கைவிட்டது சஜித் தரப்பு

### கட்சிக்குள் கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஜன. 14

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைக்கும் வேலைத்திட்டத்தை கைவிட அந்த கட்சி தீர்மானித்துள்ளது.

தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர் இதற்கு கடும்எதிர்ப்பை வெளியிட்டுள்ளமையே இதற்கு காரணம்.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியில் இணைத்தால், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்திருந்ததாக அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

இதனால், உட்கட்சி மோதல் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருதற்காக புதிதாக கட்சிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை இணைத்துக்கொள்ளும் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்த கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது. நிறுத்த கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது. (அ)

## ஆபிரிக்க குடியரசில் இலங்கை ஹெலிகொப்டர் கடத்தப்பட்டதா?

### பாதுகாப்பு அமைச்சு விளக்கம்



கொழும்பு, ஜன. 14

ஐ.நா. அமைதிக்காக்கும் பணியில் ஈடுபட்டுவரும் இலங்கை விமானப்படையின் எம்.ஐ -17 ஹெலிகொப்டர் மத்திய ஆபிரிக்க குடியரசில் வெள்ளிக்கிழமை விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் போலியான செய்திகளை பரப்ப வேண்டாம் என பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

காலநிலை சீர்கேடு காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஹெலிகொப்டரை தீவிரவாதக் குழுவொன்று கடத்திச் சென்றுள்ளதாக கூறப்படும் செய்திகளில் எந்தவொரு உண்மை தன்மையும் இல்லை. காலநிலை சீர்கேடு காரணமாகவே இந்த ஹெலிகொப்டர் அங்கு தரையிறக்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்சவின் பணிப்புரையின் பேரில் விபத்து குறித்து விசாரணை நடத்த விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக விமானப்படையின் ஊடகப் பேச்சாளர் குழுத் தலைவர் துஷான் விஜேசிங்க அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.01.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பந்தாடிய குகை!

எஸ்.ஜெகதீசன்

தூங்கும் பெண்ணின் பெருங் குகை எங்கே உள்ளது?

உயர் வகுப்பு சரித்திர ஆசிரியையின் இக்கேள்வியால் கதிரையின் நுனிக்கு நகர்தது வகுப்பு.

நாம் படிப்பது சரித்திரமா? பூகோளமா? உடலியலா? - யாரோ ஒரு மாணவன் சிறு துண்டில் எழுதியது வகுப்பில் அவசர சுற்றறிக்கை போலாகியது.

தாம் லுவாங் குன் நும் நங் நன் என்றதன் தமிழ் வடிவம்தான் இது. தாய்லாந்தின் நான்காவது பெரியது இந்தக் குகை! - சிறிது இடைவெளியின் பின் ஆசிரியையே பதிலையும் கூறினார்.

தாய்லாந்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல தாய்லாந்திற்கு செல்பவர்களும் செல்ல விரும்பும் பிரதேசமாக சரித்திரம் மாற்றியமைத்த பெருங்குகைதானே என்றனர் வகுப்பிலிருந்த அனைவரும்.

“சரி. இப்பொழுது ஐந்து குழுக்களாக பிரிக்கின்றேன். இந்தக் குகை பற்றியோ உலகின் பார்வை அதன் மீது படர்ந்தது ஏன் என்றோ வரலாற்றில் இடம் பெறும் வகையில் அங்கு என்னதான் நடந்தது குறித்தோ தாயாரித்து வருமாறு கடந்த வாரம் கூறியிருந்தேன்.எனவே தெரிந்தவற்றை சொல்லுங்கள். ஒரு குழு தெரிவித்த கருத்தை மறுபடி சொல்பவர்கள் தண்டனை செலுத்த வேண்டும் என்பது நிபந்தனை.அதனால் கவனமாகக் கேளுங்கள்”என்றார் ஆசிரியை.

“இதனை பார்ப்பதற்கு மியான்மர் - தாய்லாந்து - லாவோஸ் எல்லைக்கு செல்ல வேண்டும். ஆசியா கண்டத்தின் பத்து நாடுகளை ஊடுருவும் ஆசிய நெடுஞ்சாலை 2 வழியே சென்று சியாங்ராங் என்ற மாகாணத்தில் 1388 மீ (.86 மைல்) உயரம் உள்ள தோய் நாங் நோன் மலைத் தொடரின் அடிவாரத்தை அடைய வேண்டும். தாம் லுவாங் குன் நும் நங் நன் என்பது இதன் முழு பெயர். ஆறு ஒன்றுக்கு பிறப்பிடமாக உள்ள தூங்கும் பெண்ணின் பெருங் குகை என்பது இதன் அர்த்தம். தாய்லாந்தின் நான்காவது பெரிய குகையான இதன் நீளம் 10.316 மீட்டர்(6.42 மைல்). ஏராளமான நீர் வீழ்ச்சிகளும் அடர் அடவிகளும் சூழ்ந்த பகுதியாக வெளியேயும் காற்றின் சுதந்திரம் குறைந்த இயற்கையின் சிக்கலான பகுதியாக உள்ளேயும் இக் குகை அமைந்துள்ளது.” என்றது முதலாவது குழு!

முதலாவது குழுவை குறுக்கீடு செய்த இரண்டாவது குழு நிபந்தனையை மீறியதால் தண்டனை செலுத்த வேண்டும் என்று ஆட்சேபித்தது.

“ஒரு குழு தெரிவித்த கருத்தை மறுபடி சொல்பவர்கள்தான் தண்டனை செலுத்த வேண்டும் என்பதே நிபந்தனை. ஆசிரியை சொன்னதை சொல்லாம் தானே” என்று முதலாவது குழு மறுப்பு தெரிவித்தது.

முதலாவது குழுவின் மறுப்பை ஏற்றுக்கொண்ட ஆசிரியை இரண்டாவது குழவை தொடருமாறு பணித்தார்.

“2018 ம் ஆண்டு யூன் மாதம் காட்டுப் பன்றிகள் எனும் பெயருடைய கால்பந்தாட்ட குழுவின் 11 வயது முதல்16 வயதுக்குட்பட்ட 12 சிறார்கள் பயிற்சியாளர் எக்காபோல் சந்தாவாங்குடன் இந்தக்குகைக்குள் சிக்கிக் கொண்டதற்கு திடீர் மழையால் ஏற்பட்ட காட்டு வெள்ளம் குகையின் உற்புற வாசலை 4.9.மீ (16 அடி) உயரத்துக்கு அடைத்தது காரணமானது.”

“வழமையாக பயிற்சி எடுக்கும் மைதானத்திலிருந்து 45 நிமிட சைக்கிள் சவாரியில் அமைந்துள்ள இக்குகைக்கு ஏன் சென்றார்கள் என்பதற்கு சாகச பயணம் மேற்கொண்டனர் என்பதே பரவலாக கூறப்படும் காரணம். எனினும் இது பயிற்சியின் ஒரு பகுதி அல்லது குழு உறுப்பினர் ஒருவரின் பிறந்த நாளுக்கான இன்ப அதிர்ச்சி அல்லது மழைநாளில் குகைக்குள்அணியினரின் பெயரைப் பொறித்தால் எதிர்காலத்தில் தாய்லாந்தின் தேசிய அணியில் விளையாடலாம் என்ற மூடநம்பிக்கை போன்ற காரணங்களும் கற்பிக்கப்பட்டன.”

எழுதியதை வாசித்தது போல கடகடவென ஒப்பவித்தது இரண்டாவது குழு.



“இந்தக் குகை தோய் நாங் நோன் மலையின் அடிப்பகுதியில் அமைந்துள்ளது.மலை உச்சியிலிருந்து 800 மீட்டர் (2625 அடி) ஆழத்தில் சிறார் மாட்டியிருந்தனர்.குகையின் உட்பகுதி சில இடங்களில் 10 மீ (33 அடி) உயரமானது.சில இடங்கள் மிகவும் குறுகலானது.”

மூன்றாவது குழு தமக்குள் கிசுகிசுப்பதாக நினைத்தது வகுப்பறை முழுவதும் கேட்டது.

வகுப்பை இடையூறு செய்த காரணத்தாலும் மலையின் பெயரை மிண்டும் உச்சரித்ததாலும் மூன்றாவது குழு அடுத்ததாக கலந்து கொள்ள முடியாது.எனவே நான்காவது குழு தொடரலாம் என்றார் ஆசிரியை.

“உலகை உதறி விட்டு ஓரிரு மணித்தியாலங்களாவது குகைக்குள் நிற்கலாம் என்று சென்ற பந்தாட்டச் சிறாரை யூன் 23 முதல் யூலை 10 வரை இருவாரங்களாக குகையே பந்தாடியது உலகமே பதறி உயிரில் வரவு வைத்த நாட்கள்.

யூன் 23 பகல் 11 மணியளவில் 12 சிறுவர்களும் பயிற்சியாளரும் குகைக்குள் புகுந்தனர். பெருகிப் பாய்ந்த காட்டு வெள்ளம் குகை வாசலை அடைத்த போது மதியம் ஒருமணி. மாலை மணி 4இற்குள் உள்ளே சிக்கியவர்களின் அடையாளமாகியது வெளியே அனாதரவாக கிடந்த அவர்களின் சைக்கிள்கள். நள்ளிரவில் தேடுதல் பணி ஆரம்பிக்கப்பட்டது.”

பின்பு எதைச் சொல்வது எனத் தெரியாது ஒருவரை ஒருவர் பார்த்தது நான்காவது குழு.

இப்பொழுது வலை ஒளி ஒன்றை சிறிது நேரம் பார்ப்போம் என்றவாறே அதனை சுவரில் விரியவிட்டார் ஆசிரியை.

உள்ளே சென்றவர்களை வெளியே வர விடாது வெள்ளம் மிரட்டியது. வெளியே இருந்தவர்களை உள்ளே செல்ல விடாது வெள்ளம் விரட்டியது. தொடரவுள்ள தொடர் மழை காரணமாக அவர்கள் முக்குளிக்க கற்றுக் கொண்டு வெளிவர வேண்டும் அல்லது குகைக்குள் பெருகும் வெள்ளம் வடியும் வரை 4 மாதங்களுக்கு அங்கு தாக்குப் பிடிக்க வேண்டும் என்றது தாய்லாந்து ராணுவம்.

வௌவால் எலி நத்தை பூரான் பூச்சி புழு போன்றன உணவாவது தாய்லாந்தில் விநோதமல்ல. அதனால் 4 மாதங்களென்ன 4 வருடங்கள் கூட அவர்கள் அங்கு தாக்குப்பிடிப்பார்கள் என கற்பனையில் கனவு கண்டவர்களும் உலகெங்கும் இருந்தனர்.

கைவசம் உள்ளே இருந்த உணவு குறைந்தது. கைவசம் வெளியே உணவு இருந்தும் உண்பது குறைந்தது. வெளியே இருந்தவர்களை ஏக்கம் தாக்கியது. உள்ளே உள்ளவர்களை தாக்கம் ஏங்க வைத்தது. குதுகலம் மறைந்த துயரம் வெளியே. துயரத்தை மறக்க குதுகலம் உள்ளே. வெளியே பார்வையாளர்கள் வீரர்கள் ஆனார்கள்.உள்ளே வீரர்கள் பார்வையாளர்கள் ஆனார்கள்.



வலை ஒளியை இருளச் செய்த மின் தடையால் இரண்டு நிமிடங்களிலே இடை நிறுத்திக் கொண்டது அந்த விவரண நாடா.

பாண் துகள் ஒன்றை தனது சின்னஞ்சிறு வாயால் கௌவி வந்து குகைக்குள் இருந்த மாணவன் ஒருத்தனின் மடியில் போட்ட ஒரு குட்டி எலி அந்த வலை ஒளியில் பலரது கவனத்தை ஈர்தத்து!

அதன் கருணையை மெச்சினர் சிலர்.

அது பயத்தில் நழுவவிட்டது என்றனர் சிலர்.

“மூன்றாவது குழவிற்கு இந்தச் சிறு தண்டனையே காணும். அவர்கள் என்ன சொல்வார்கள் என்பதை இனிக் கேட்போம்.”என்றார் ஆசிரியை.

“தாய்லாந்து கடற் படை வீரர்களும் பேரிடர் மீட்புப் பணியினரும் ஆழ்கடல் சுழியோடிகளும் குகைக்குள் தேடுதலை ஆரம்பித்தனர்.மீட்புப் பணியில் அமெரிக்க பிரித்தானிய நீரடி ஆய்வு குழுவினர் நால்வருடன் சர்வதேச நீரிடர் மீட்பு நிபுணர்களும் சேர்ந்தனர்.குகைக்குள் உயரும் வெள்ளப் பெருக்கினை குறைக்க பாரிய நீரிறைக்கும் இயந்திரங்களை இயக்கப்பட்டன. குகைக் கூரையில் படக்கருவிகளைப் பொருத்தி குகைக்குள் அவதானிக்க வசதியாக்க ஆங்காங்கே 100 துளைகள் தோண்டபட அதன் ஊடே கொஞ்சம் காற்றும் அதை விடக் கொஞ்சமாக சூரிய ஒளியும் உட்புகுந்தது. வழி நெடுக வழிகாட்டவென கயிறு போடப்பட்டது.

தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓ சா நிலமையை நேரில் அவதானித்தார். உள்ளே அதிகதுாரம் குகைக்குள் முன்னேறிய சுழியோடிகள் செயற்பாட்டு முகாமொன்றை தற்காலிகமாக அமைத்தனர். சிறார் யோகா ஆசனம் தியானம் மூச்சுப் பயிற்சி மூலம் மனதை ஒருமுகப்படுத்தி சோர்வை தவிர்க்க ஆரம்பித்தனர்.குகை வாயிலிருந்து 3.3 கி.மீ (2.0 மைல்) உள்ளே அவர் கள் உயரமான பாறைகளில் உயிருடன் இருப்பதை முதலில் பிரித்தானிய சுழியோடிகள் குழு கண்டு ஆக்ஸிஜன் உருளைகள விநியோகித்தது.”

எங்கே தமக்கான சந்தர்ப்பம் நழுவி விடுமோ என்ற பதட்டத்திலிருந்த மூன்றாவது குழு கொட்டித் தீர்த்தது.

குகை மிட்பின் அடுத்த மாதம் தனிப்பட்ட விஜயமாக கனடாவிற்கு சென்றிருந்த தாய்லாந்தின் பிரதமருடன் ரொரண்ரொவிலிருந்து கல்கரி வரை சுமார் நான்கு மணி நேரம் அருகருகேயிருந்து எனது மாமாவிற்கு பயணிக்க நேர்தது என்றான் ஒரு மாணவன்.

நம்பிட்டோம் என்றான் இன்னொருவன்.

நல்லிணக்கம் அபிவிருத்தி பற்றி கதைத்துக் கொண்டீர்களாக்கும் என்றான் மேலும் ஒருவன்.

வகுப்பறை சிரிப்பொலியில் நிறைந்தது!

அடுத்தது ஐந்தாவது குழு என ஆசிரியை அழைக்க முன்பாகவே எழுந்த அக் குழுவின் பேச்சாளர் “சற்று முன் மின் தடையால் இடை நிறுத்தப்பட்ட வலை ஒளியை ஏற்கனவே பார்த்ததாகவும் அதன் தொடர்ச்சியாக மனதில் பதிவானவற்றை சொல்லப் போவதாகவும் தெரிவித்து விட்டு” தொடர்ந்தார்.

“ஏசாதீங்கம்மா என்ற வார்த்தை உள்ளிருந்தும் பசியை தாங்கினாயா என்ற வார்த்தை வெளியிலிருந்தும் அதன்பின் பலமுறை குகைச்சுவர்களில் எதிரொலித்தது.மருத்துவர் தாதி உட்பட ஏழு பேர் கொண்ட சுழியோடிகள் மருந்துகளுடனும் உணவுகளுடனும் சிறார் இருந்த பகுதிக்கு சென்று தங்கி முகத்தை மூடும் வகையில் மூச்சுக்கவசம் அணியும் பயிற்சியையும் முக்குளிப்புப் பயிற்சியையும் ஆரம்பித்தனர்.ஒவ்வொரு சிறுவரோடும் இரண்டு சுழியோடி வீரர்கள் உடன்வரவும் மீட்கப்படும் சிறுவனுக்கான காற்றுக் குடுவையை ஒருவர் சுமக்கவும் அடுத்தவர் அவனுடன் கயிற்றால் இணைக்கப்படவும் திட்டமிடப்பட்டது.மீட்புப் பணியில் ஈடுபட்ட சமன் குணன் என்ற தாய்லாந்தின் கடற்படை வீரர் உள்ளே ஆக்ஸிஜன் தீர்ந்து போன நிலையில் சகதியில் சிக்கி உயிரிழந்தார்.சர்வ தேச சுழியோடிகள் 18 பேர் நான்கு சிறாரை பாதுகாப்பாக முதலிலும் மேலும் நான்கு சிறாரை அடுத்தநாளிலும் மீட்டனர். அதற்கும் அடுத்த நாளான யூலை 10 ம் திகதி மிகுதி நான்கு சிறாரும் பயிற்சியாளரும் மீட்பு பணியாளர்களும் பவுத்திரமாக குகையை விட்டு வெளியேறியனர்.”

ஏற்கனவே தயாராகவும் அதனால் உசாராகவும் இருந்தபடியால் சகல குழுக்களும் ஒன்றுக் கொன்று சோடை போகாத வகையில் தத்தமது பங்களிப்பை செவ்வனே செய்தனர். அனைவரையும் பாராட்டுகின்றேன் என்றவாறே தனது முடிவுரையை ஆரம்பித்தார் ஆசிரியை.

தாய்லாந்தின் 10,000 மக்கள் 100க்கும் மேற்பட்ட சுழியோடிகள் 900 பொலிஸார் 2000 ராணுவ சிப்பாய்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.10 பொலிஸ் உலங்குவானுர்திகள் பொலிஸாரின் 7 நோயாளர் ஊர்திகள் 700 பிராணவாயு உருளைகள் நுாறு கோடி லீட்டர் நீரை வெளியேற்றும் இயந்திரங்கள் மீட்பு பணியில் செயற்பட்டன.

பிரித்தானியா கனடா அமெரிக்கா அவுஸ்திரேலியா சீனா ரஷ்யா இந்தியா ஜப்பான் இஸ்ரேல் பெல்ஜியம் செக் குடியரசு டென்மாார்க் பின்லாந்து நெதர்லாந்து லாவோஸ் ஆகிய நாடுகள் கரை சேர்க்கும் பணியில் கரம் கொடுத்தன.

வௌவால் எச்சங்களால்வரும் நோய் எலிகளின் சிறுநீர் தரும் வியாதி ஈரநிலப் பூஞ்ஞைகள் மூலம் உருவாகும்பிணி இருட்டுக்கு பயம் போன்ற எதிர்காலத்தில் அவர்களுக்கு ஏற்படக் கூடிய உபாதைகளிலிருந்து - ஆண்டவா அவர்களை காப்பாற்று என பிரார்த்திக்கத் தொடங்கிற்று உலகு!

- மொத்த உலகமும் திரும்பிப் பார்த்து வாழ்வோடு வரவுவைக்கும் வரலாறானது பந்தாடிய குகை!

●